விலை ரூபா. 10.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:– பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 21 செவ்வாய்க்கிழமை (06.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 352

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாவதாகத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து ஆராய இராணுவமும் புலிகளும் சந்திக்க ஏற்பாடு

## • நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு திடீரென நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்கு விடுதலைப் புலிகளையும், இராணுவத்தையும் சந்திக்கவைப்பதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.**

**இது தொடர்பாக முகமாலை யுத்த சூனியப் பிரதேசத்தில் நேற்று மாலை 4 மணியளவில் நடைபெறவிருந்த இருதரப்புச் சந்திப்பு இறுதிநேரத்தில் இடைநிறுத்தப்பட்டது. இச்சந்திப்பு திட்டமிட்டவாறு இன்று அல்லது நாளை நடைபெறக்கூடுமென கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்றூவ் ஹொக்லண்ட் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக இராணுவத்தினர் மீது இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்கள் குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள பதற்றநிலை குறித்தும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுவதற்கு வருமாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக அழைப்புவிடுத்திருந்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட விடுதலைப் புலிகள் முகமாலையில் உள்ள யுத்த சூனியப் பிரதேசத்தில் நேற்றுமாலை 4 மணிக்கு இச்சந்திப்பினை மேற்கொள்ள இணங்கியிருந்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த சிப்பாய் நேற்று மரணம்

கோண்டாவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் நேற்றுக்காலை உயிரிழந்தார்.

படுகாயமடைந்த அவர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பயனளிக்காமையினால் அவர் அங்கு மரணமானார்.

இதேவேளை கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் சடலங்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளைமோர்தாக்குதலில் உயிரிழந்தவர்கள் ஜி.ஆர்.ஆனந்த, நிகால்சந்திரசிறி, இ.எம்.பிரியந்த, நவரட்ண, றுவான் குமார, எல்.எஸ்.ரத்நாயக்க மற்றும் டி.யு.ஜயதேவ ஆகியோர் இனங்காணப்பட்டுள்ளனர். (ச–4)

## பாடசாலைகளுக்கு அருகிலிருக்கும் இராணுவத்தை உடன் வெளியேறக்கோரி மாணவ சமூகம் இன்றுவரை காலக்கெடு


### தவறின் செயற்பாடுகளை முடக்கிப் போராடுவோமென எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளை ஆக்கிரமித்திருக்கும், அண்மையிலிருக்கும் இராணுவ முகாம்கள், காவலரண்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும். அத்துடன் அச்சுறுத்தல் எவையுமற்ற சுதந்திரமான கல்விக்கு இராணுவம் வழிவிடவேண்டுமென யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக்கோரிக்கையோடு இன்றுமுதல் வடமராட்சியில் தொடர்ச்சியான மாணவர் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பகிரங்க கோரிக்கைகளை ஏற்று இன்று மாலைக்கு இடையில் சரியான பதிலை இராணுவம் தரவேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் அடுத்துவரும் நாட்களில் மாணவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை ஏனைய பிரதேச மாணவர்களையும் ஒன்றிணைத்து கல்விச் செயற்பாடுகள், அரச பணிகள் என்பவற்றை முடக்கி தொடர்ச்சியான போராட்டத்தினை முன்னெடுக்கப்போவதாக தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இராணுவ முள்வேலிக்குள் இருந்து தம் கற்றல் செயற்பாடுகளை தொடர்ந்த ஹாட்லிக் கல்லூரி சமூகம் தம்மீதான இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்தும், வேலாயுதம் மகா வித்தியாலயம் மற்றும் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் வன்மையாகத் தாக்கப்பட்டு அவர்களது உடைமைகள் பறிக்கப்பட்டதையும் கண்டித்து ஹாட்லிக் கல்லூரி தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று அமைதியாக மறியல்போராட்டத்தில் ஈடுபட்டு (10 ஆம் பக்கம் பார்க்க)



இராணுவத்தினருடனான சந்திப்பிற்காக முகமாலை சூனியப் பிரதேசத்தில் காத்திருக்கும் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி குழுவினரை படத்தில் காணலாம்.

## கோண்டாவில் சம்பவத்திற்கு புலிகளுக்கு தொடர்பில்லை

### இளம்பரிதி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கோண்டாவிலில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கூறியுள்ளதாவது;

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் கொல்லப்பட்ட விடயம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் எங்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இத்தாக்குதல்களுக்கும் உங்களுக்கும் தொடர்பிருக்கிறதா என்று கண்காணிப்புக் குழுவினர் எங்களிடம் கேட்டனர். யாழ். குடாநாட்டில் எந்தவொரு விடுதலைப் புலி உறுப்பினரும் இல்லை.

இராணுவத்தினர் மீது இத்தகைய தாக்குதல்களை நடத்தவேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

இந்தத் தாக்குதலை நாம்நடத்தவில்லை என்று திட்டவட்டமாக கண்காணிப்புக்குழுவுக்கு தெரிவித்துள்ளோம். யாழில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு நாம் எந்தவகையிலும் காரணமில்லை என்று முற்றாக நாம் மறுத்திருக்கிறோம்.

எங்களுடைய மக்களைப் பாதிக்கின்ற– மக்களைப் படுகொலை செய்கின்ற நிகழ்வுகளை மேற்கொள்ளாமல் இயல்பாகவே எம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுள்ளோம் என்றார் இளம்பரிதி. (ச–4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# மெல்லப்பரவும் வயிறு எரிவு நோய் (அல்சர்)

**இன்றைய நவீன உலகில் அல்சர் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வயிறு எரிவு நோயினால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகம் . இரைப்பையில் புற்றுநோயையே உண்டாக்கக்கூடிய பயங்கரத் தன்மை இந் நோய்க்கு உண்டு.**

**இந்நோய் பற்றியும், இந்நோய் வாய்ப்பட்டவர்கள் உட்கொள்ள வேண்டிய மருந்துவகைகள், உணவுக் கட்டுப்பாட்டு முறைகள் கடைப் பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் என்பன பற்றி கேள்வி-பதில் மூலம் விளக்கமளிக்கிறார் டாக்டர் சி.யமுனாநந்தா.**

**கேள்வி:-** வயிறு எரிவு அல்லது நெஞ்சு எரிவு நோய் என்றால் என்ன?

**பதில்:-** அதிக அமிலத்தன்மையினால் இரைப்பை, முன்சிறுகுடல் அல்லது களம் இரைப்பையைச் சந்திக்கும் பகுதி புண்ணாதலால் ஏற்படும் வேதனையே வயிறு எரிவு அல்லது நெஞ்சு எரிவு நோய் ஆகும்.



**கேள்வி:-** வயிறு எரிவு நோய் உருவாகப் பிரதான காரணம் யாது?

**பதில் :-** கேலியோ பக்ரர் பைலோரி எனும் பற்றீரியா பொதுவாக எல்லோரிலும் இளவயதிலேயே தொற்றிவிடும். இது இரைப்பை, முன்சிறுகுடல் அகவணியில் வாழ்ந்து சைட்டோகைனின் எனும் சுரப்பினைச் சுரந்து அகவணியில் அழற்சியை உண்டு பண்ணும். இதில் அதிக அமிலம் சுரக்கப்பட புண் ஏற்படும்.

**கேள்வி:-** வயிறு எரிவு நோய் உருவாகும் முறைகள் எவை?

**பதில்:-** உடனடியாக மருந்துகள் பாவிப்பதாலும் (அஸ்பிரின், வோல்ட்டாரின், பிறிட்னிசலோன்) நீண்ட நாட்களுக்கு படிப்படியாக ஏற்படுவதாகவே அமையும்.

**கேள்வி:-** இரைப்பை புண்ணாதலின் அறிகுறிகள் யாவை?

**பதில்:-** நெஞ்சு எரிவு இருக்கும். உணவு உட்கொண்ட 2 மணித்தியாலயத்திற்குள் ஏற்படும். இது முதுகுப்புறத்திற்குப் பரவும் இரவில் நோ ஏற்படாது வாந்தி எடுப்பதால் நோ குறையும் இதனால் வாந்தி எடுக்க முயற்சிப்பர் பசி இருக்கும். ஆனால் உணவு உட்கொள்ளப் பயப்படுவர் இதனால் உடல் மெலிந்து காணப்படும். சில வாரங்களிற்கு நோ இருக்கும் பின் 2-6 மாதங்களிற்கு நோ இராது.

**கேள்வி:-** முன் சிறுகுடற் புண்ணாதலின் அறிகுறிகள் யாவை?

**பதில்:-** நெஞ்சு எரிவு இருக்கும் உணவு உட்கொண்டு 2 மணித்தியாலத்தின் பின் ஏற்படும் பசி வேதனை ஏற்படும் இதனால் அதிகம் உண்பர். உடற்பருமன் அதிகரிக்கும் இரவில் நித்திரையைவிட்டு எழச்செய்யும். அதிகாலை 2 மணிக்கு எழும்பி பால் அல்லது பிஸ்கட் சாப்பிடுவர். வாந்தி குறைவு அதிகம் உமிழ் நீர்சுரக்கும்.

**கேள்வி:-** வயிறு எரிவு உருவாக துணைபோகும் காரணிகள் எவை?

உணவுப் பழக்கம் பொரித்த உணவு, உறைப்பு, மதுபாணம் என்பன அதிக பாதகத்தை ஏற்படுத்தும் மேலும் புகைப் பிடித்தல் புண்ணாதலுக்கும் குணமாகாமல் நீடிக்கவும் ஏதுவாக அமையும் நெருக்கீடுகள் அல்லது மன அழுத்தம், ஒருவரின் ஆளுமை, பதகளிப்பு என்பனவும் இந் நோயில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மேலும் உணவு உண்ணாது இருத்தல், ஒழுங்கான நேர இடைவெளியில் உணவு உண்ணாமை, கண்டகண்ட நேரங்களில் வெவ்வேறு வகை உணவுகளை உண்ணல் என்பனவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

**கேள்வி:-** இரைப்பை புண் உள்ளோர் எவ்வகை உணவுகளை உட்கொண்டால் நோக்குறைவாகும்?

**பதில்:-** பால்

**கேள்வி:-** வயிறு எரிவுக்கு பொதுவான மருத்துவ சிகிச்சை யாது?

**பதில்:-** இரைப்பையில் உள்ள அமிலத்தின் அளவைக்குறைக்க மருந்துகளை குளிசைகளாகவோ திரவமாகவோ உபயோகிக்கலாம். அலரொக்ஸ், டைஜின், என்பவை பொதுவானவை. மேலும் அமிலத்தின் சுரப்பைக்கட்டுப்படுத்த எலுபிரசோல், ரனிட்டிமன் குளிசைகளை உபயோகிக்கலாம்,

மேலும் மேற்கூறிய மருந்துகளும் கேலியே பக்டர் பைலோரி பக்ரீரியாவை அழிக்க அமெரிக்காவின் இனாரிற்றி றோமையின், மெட்டு நைட்ரசோல் எனும் மூன்று மருந்துகளையும் ஆறு கிழமைக்கு உபயோகித்தல் அவசியம்.

**கேள்வி:-** இரைப்பைப் புண்ணாதலினதும் முன்சிறு குடற் புண்ணாலினதும் ஆபத்துத்தன்மையாது?

**பதல்:-** குருதிப் பெருக்கு, அகவணியில் இருந்து வெளிப்புறம் வரை புண் பெரிதாதல் என்பன ஏற்படும் மேலும் இரப்பையில் புற்று நோய் ஏற்படும் வாய்ப்பும் ஏற்படலாம்.

**கேள்வி:-** வயிற்று எரிவு வராது தடுக்கும் முறைகள் யாவை?

**பதில் :-** நேரத்துக்கு உணவு உண்ணல், மன அழுத்தம் இன்றி வாழல், புகைபிடிக்காமை, பொரித்த உணவு, அதிக உறைப்பைத் தவிர்த்தல், கோபப்படாது வாழல்.


**டாக்டர் சி.யமுனாநந்தா**

## இடமாற்ற நடவடிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் அனைவரும் ஜனவரி மாதாத்திலிருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு அரச திணைக்களங்களில் முவாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டத்தாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுடைய கற்கை நெறிக்கும் வழங்கப்பட்ட பதவிகளுக்கும் வேறுபாடு காணப்படுவதால் பொருத்தமான பதவியை வழங்குவதறகாகவே இவ் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.(ரு-7)









**கொமர்ஷல் வங்கியின் அருணலுக் கணக்குடைய புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 49 மாணவர்களுக்கு நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வங்கி முகாமையாளர் இரவீந்திரா உரையாற்றுவதையும், மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள், பெற்றோர்களையும் படத்தில் காணலாம்.**

**படங்கள்:- பாலமுருகன்**

## இராசிபலன்

06.12.2005

(கார்த்திகை 21, செவ்வாய்கிழமை)

பஞ்சமி பிற்பகல் 12.08 மணிவரை

திருவோணம் மாலை 5.32 மணிவரை

இராகுகாலம் 3.17-4.47 மணிவரை

சுபநேரம் 10.47-12.17 மணிவரை

விநாயகர்சஷ்டிவிரதம்

| | |
|---|---|
| மேடம் | கடின முயற்சி, உறவினர் சந்திப்பு, போசன சுகம், மேன்மை. |
| இடபம் | பிதா சிந்தை, சரீரப்பிரயாசை, காரிய தாமதம், பித்த ரோகம். |
| மிதுனம் | அப கீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், வாகன பயம். |
| கடகம் | எடுத்த கருமங்கள் கைகூடும், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, உடல் நலம். |
| சிங்கம் | நல்ல காரியம், அதிகாரம், தேக நலன், பகைவரால் நன்மை. |
| கன்னி | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம். |
| துலாம் | புதிய உறவு, வீண்பயம், சுபநிகழ்வு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், போசன சுகம், பிரயாணம். |
| தனுசு | கோபப்படல், முயற்சி தாமதம், சுப செலவு, ஆரோக்கியக் குறைவு. |
| மகரம் | தெளிந்த சிந்தை, நல்ல முயற்சி, பெரியோர் உதவி, விருந்துபசாரம். |
| கும்பம் | பிரயாண பயம், நிலை மாற்றம், வேலைச் சுமை, முயற்சி தாமதம். |
| மீனம் | பெரியோர் உதவி, தடைப்பட்ட காரியம் கைகூடும், அதிகாரம், மனமகிழ்ச்சி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## விமானநிலைய தாக்குதல் தொடர்பில் நான்குபேருக்கு குற்றப்பத்திரம்

கட்டுநாயக்க விமான நிலையம் தாக்கப்பட்ட வழக்கில் நால்வருக்கு கடந்த வெள்ளிக்கிழமையன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தால் சிங்கள மொழியிலான குற்றப் பத்திரம் வழங்கப்பட்டது.

கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினசிங்கம் புட்பகுமாரன் (வயது 31), திருகோணமலையை சேர்ந்த விகடர் அல்பிரட் டொமினிக் (வயது 42), காரை நகரை சேர்ந்த சுப்பிரமணியம் தவராஜசிங்கம் (வயது 37), வவுனியாவை சோந்த நாகேந்திரன் நாகரடணம் (வயது 46) ஆகிய நால்வரும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.அபயரட்ண முன்னிலையில் 90 பக்கங்கள் கொண்ட குீற்றப்பத்திரத்தை பெற்றுக்கொண்டனர்.

அனைவர் மீதான குற்றச்சாட்டுகளையும் ஒன்றாக உள்ளடக்கியதாக இக் குறறப்பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இக் குற்றப்பத்திரத்தில் வவுனியாவிலிருந்து நீர் கொழும்புக்கு வந்திருந்த நபர்களின் செயலுக்கு 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 01ஆம் திகதிக்கும் 2001ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் உதவி புரிந்தது. கட்டுநாயக்க விமான நிலைய விமானப்படைத் தளம் மீது தாக்குதல் நடத்துவதுடன் விமானங்களை அழிக்க சதித்திட்டம் தீட்டியது அரச சொத்துக்களுக்கும், கட்டங்களுக்கும் சேதம் விளைவிக்க உதவி புரிந்ததுடன் சதித்திட்டம் தீட்டியது உட்பட 311குற்றச் செயல்கள் இழைக்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தினர் இவ்வழக்கு தொடர்பில் 415அரச தரப்பு சாட்சிகள் முன்னிலை யாக்கப்பட்டுள்ளதுடன் 244 தடயப் பொருட்கள் நீதி மன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று குற்றப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளனர். (த-4)

## தொண்டமானுக்கு உயிராபத்து ஏற்படின் மஹிந்தவின் அரசாங்கமே பொறுப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று அக்கட்சி எச்சரித்துள்ளது.

ஆறுமுகம் தொண்டமானின் பாதுகாப்புக்கு 16 கொமாண்டோக்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற நிலையில் ஆறுமுகம் தொண்டமானுக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டது.

இதற்கு இ.தொ.க.கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஆறுமுகம் தொண்டமானின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் தொணடமானுக்கு ஏதேனும் நேர்ந்தால் அரசாங்கமே அதற்குப் பொறுப்பு என்றும் அக்கட்சி எச்சரிக்துள்ளது. (க-4)

# இனி நிகழப்போவது புலிகளின் யுத்தம் அல்ல; தமிழர்களின் புரட்சியாக வெடிக்கும் இறுதியுத்தம்

## -எஸ்.ஜெயானந்தமூர்த்தி

(கொழும்பு)

இனிவரும் யுத்தத்தில் விடுதலைப் புலிகள் மட்டும் பங்கேற்கப்போவதில்லை ஒட்டுமொத்த தமிழ் மக்களுமே நடத்தப் போகிற யுத்தம் என்று இலங்கைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பிரான்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர் நாள் விழாவில் உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்குப் பிரதேசத்தில் போராளிகளும் மக்களும் பல பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைதி, அமைதி என்று கூறப்பட்ட இந்தக் காலத்தில் தான் பொதுமக்களும் போராளிகளும் பாரிய அளவில் கொல்லப்பட்டுள்ளார்கள். தாயகத்திலே நிழல் யுத்தம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு பல படுகொலைகளைச் செய்து கொண்டிருக்கின்றது. மட்டு. அம்பாறையில் சிறப்பாக செயற்பட்டுவந்த கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளைப் படுகொலை செய்தது அரசும் அதன் புலனாய்வுத்துறையும் தான். இந்தப் படுகொலைகள் மூலம் மக்களை அச்சுறுத்தி பிளவுபடுத்திவிடலாம் என்று எண்ணினார்கள்.

ஆனால் மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். பிரதேசவாதம் உள்ளிட்ட எந்த சூழ்ச்சியாலும் சதியாலும் குழப்பத்தாலும் மக்களை என்றுமே பிரித்துவிட முடியாது. வடக்கு-கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவருமே விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் எங்களுடைய தலைவரின் கீழ் ஒன்றுபட்டு ஒற்றுமையாகவே நிற்கிறார்கள்.

கடந்த 25 ஆண்டுகாலமாக நமது போராட்டம் எந்த இலக்கை நோக்கி நடைபெறுகிறதோ அந்த இலக்கை நாம் நிச்சயமாக அடைவோம். தமிழீழமே எமது இறுதி மூச்சு என்று போராடிய மாவீரர்கள் அந்தத் தமிழீழத்தைப் பார்ப்பதற்காகவே கல்லறைகளிலே உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்றும் மரணிக்கப்போவதில்லை.

எதிர்கால தலைமுறையின் சுதந்திரமான நிம்மதியான வாழ்வுக்காகவே பதினெட்டாயிரம் போராளிகள் உயிரிழந்துள்ளனர். நாங்கள் இன்னும் இராணுவத்துக்கும் அரசுக்கும் அடிபணிய வேண்டுமா? அவர்களிடம் நாங்கள் பிச்சையெடுக்க வேண்டுமா? நாங்கள் எங்கள் உரிமைகளுக்காக யாரிடமும் மண்டியிடத் தேவையில்லை எங்களுடைய மண் எமக்கு வேண்டும் என்று உரத்துக் கூறி வருகிறோம்.

எங்களுடைய நிலத்தில் நாங்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எமது அரசை அமைத்து வாழ்வதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். சர்வதேச சமூகம் அதைப் பெற்றுத்தர வேண்டும் என்று நாம் பகிரங்கமாக பிரகடனம் செய்தோம்.

ஆனால் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான எமது பிரகடனத்தை சர்வதேச சமூகம் அணுகியிருக்கிறது. எமது உரிமைகளைப் பெற்றுத்தருவதில் சர்வதேச சமூகமும் பின்னடிப்பதாகவே நான் கருதுகிறேன். இது தொடர்பில் நாங்கள் மிகவும் வேதனையடைகிறோம். கவலையடைகிறோம்.

மீண்டும் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று கூறிக் காலத்தை இழுத்தடிப்பதில் பயனேதும் இல்லை. மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு குறுகிய கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது சர்வதேச நாடுகளுக்கும் நாம் கோரிக்கை விடுத்திருக்கிறோம். ஆனால் சர்வதேச சமூகமோ எங்களை ஏறெடுத்துப் பார்ப்பதாக இல்லை.

ஆகவே நாம் இறுதியாகச் செய்யவேண்டியது நாம் நமது சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்க வேண்யதுதான். எங்களுடைய தாயகத்தை மீட்டெடுத்து அரசாங்கத்திலிருந்து பிரிந்து வாழ்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதை நமது போராட்டத்தின் மூலம் உலகுக்குத் தெரிவிப்போம்.

இலங்கையின் வடக்கு-கிழக்கிலே 70 வீதமான பிரதேசம் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. இனி இருப்பது 30 வீதமான பிரதேசம் தான். இவை இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசம்.

கடந்த காலத்தில் பூநகரி, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஆனையிறவு இராணுவத்தளம் என அத்தனை சமர்களிலுமே இராணுவத்துடன் நேரடியாக விடுதலைப்புலிகள் மோதிய போது சிங்கள இராணுவம் புறமுதுகிட்டு ஓடியதுதான் நடந்தேறியது.

நாம் இறுதிக்கட்டப் போராட்டத்திலே நிற்கிறோம். இந்த இறுதிப் போராட்டம் நமது தமிழீழத் தாயகத்தை அமைக்கின்ற போராட்டமாக அமையும். இனி வருகிற அந்தப் போராட்டம் விடுதலைப் புலிகள் மட்டுமே பங்கேற்கிற போராட்டம் அல்ல மக்கள் போராட்டமாக வெடிக்கும் தமிழீழத்தின் மக்கள் அனைவருமே அந்தப் போராட்டத்திலே குதிப்பார்கள்.

புலம் பெயர் நாடுகளிலே வாழுகிற தமிழர்களே! நீங்களும் அந்தப் போராட்டத்திலே வந்து பங்கேற்க வேண் டும் என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

(த-4)

## பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினரின் ஒத்துழைப்புடன் நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜிதஜெய சுந்தர தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கின் சில பகுதிகளில் நிலவும் அமைதியின்மையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார். (த-7)

## தமிழர்களின் தன்னாட்சி அரசை அங்கீகரிக்க வேண்டும்

இலங்கையில் தமிழர்களது தன்னாட்சி அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று நியூயோர்க் ரைம்ஸ் குழுவின் இதழான போஸ்டன் குளோப் இதழ் கருத்து தெரிவித்துள்ளது.

போஸ்டன் குளோப்பின் தலையங்கத்தில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

காலனியாதிக்க காலத்துக்குப் பின்னைய இன விடுதலைப் போராட்டங்களான காஸ்மீர், இஸ்ரேல் பாலஸ்தீன, றுவாண்டா, சூடான் பிரச்சினைகளில் மேற்குலகம் அக்கறை காட்டியது. ஆனால் இலங்கைத் தீவில் தசாப்தங்களாக நீடித்துவரும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினருக்கும் தமிழ் சிறுபான்மையினருக்கும் இடையேயான பிரச்சினையை மேற்குலகம் கண்டு கொள்ளாதது பெரும் சோகமானதாகும்.

2002ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அமுலில் இருக்கும் யுத்த நிறுத்தம் முறிந்துபோய் மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்காக அரசாங்கம் சர்வதேச அனுசரணையாளர்களுக்கு அண்மையில் அழைப்பு விடுத்திருக்கிறது.

கடந்த மாதம் நடந்த தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் சிங்கள பெரும்பான்மை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே எதிர்வரும் மாதங்களில் யுத்தம் நடைபெறக்கூடும் என்று அச்சம் ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தீவின் வடபகுதியில் வாழும் தமிழர்களின் தேர்தல் புறக்கணிப்பினால் இரு சிங்கள கடும்போக்குத் தேசியவாத கட்சிகளின் கூட்டணியுடன் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார்.

பாராளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையில், தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை நிராகரிப்பதாகவும் பெரும்பான்மை சிங்களப் பௌத்தர்களின் கட்டுப்பாட்டின் கீழான ஒற்றையாட்சியே நீடிக்க வேண்டும் என்றும், ஆழிப்பேரலை மீளமைப்புக்காக புலிகள் அரசாங்கம் இணைந்து மேற்கொண்ட ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை கலைத்துவிடுவதாகவும் நோர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகளை நீக்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த உரையைத் தொடர்ந்து இருநாள்களுக்குப் பின்னர் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது வருடாந்த மாவீரர்நாள் உரையில், புதிய ஜனாதிபதிக்கும் புலிகளுக்கும் இடையே பாரிய கொள்கை இடைவெளி இருப்பதாகவும், தமிழர்கள் தங்களது பொறுமையை இழந்துவிட்டார்கள் என்றும் தமிழர் தாயகத்தின் தன்னாட்சி அரசாங்கம் தொடர்பாகவும் தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வு காணும் வகையில் விரைவில் அரசியல் தீர்வுத்திட்டத்தை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்றும், புதிய அரசாங்கம் இதை நிராகரித்தால், அடுத்த ஆண்டு எமது சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை தொடங்க வேண்டியிருக்கும் எனறும் பிரபாகரன் அந்த உரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் ஐ.நா. சபையினது ஆழிப்பேரலை மீளமைப்புக்கான விசேட பிரதிநிதியுமான பில் கிளிண்டன், தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறியும் அபாயம் இருப்பதாகத் தெரிவித்துள்ளர். இலங்கையில் மீண்டும் இனப்பிரச்சினை தொடங்கினால் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகள் முடங்கும் என்று கூறியுள்ளார்.

இலங்கை சில வரையறைகளுடனான தந்திரோபாய முக்கியத்துவமான பிரதேசம் என அமெரிக்கா கருதுகிறது. ஆனால் அமெரிக்காவின் புதிய தந்திரோபாய பங்காளியான இந்தியா புலிகளுக்கும் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்துக்கும் யுத்தம் நடைபெறுவது தொடர்பில் அச்சம் கொண்டுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிக்கவும் தமிர்களது தன்னாட்சி அரசாங்கத்தை அங்கீகரிக்கின்ற அரசியல் தீர்வுக்கான வரைபை ஏற்படுத்தவும் அமெரிக்காவும் இந்தியாவும் சர்வதேச சமுக அழுத்தங்களை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## ஆத்திரமூட்டலின் மத்தியிலும் அமைதிகாக்கும் படையினர்

### கூட்டு நடவடிக்கைகள் தலைமையகம் அறிக்கை

4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 1மணியளவில் வழமையான நிர்வாகக் கடமை களுக்காக யாழ்ப்பாணம் -பலாலி வீதியில் டிராக்டர் வண்டியொன்றில் பயணம் செய்து கொண்டிருந்த இராணுவத்தினர் சிக்கி யாழ்ப்பாண நகரிலிருந்து 6 கிலோ மீற்றர் தொலைவில் கோண்டாவிலில் எல்.ரி.ரியினரின் இரண்டு கிளைமோர்த் தாக்குதலுக்குள்ளாகினர்.

எல்.ரி.ரி யினரின் கோழைத்தனமான இத்தாக்குதலால் 6 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். இத்தாக்குதலில் படுமோசமாகக் காயமடைந்த மற்றுமொரு இராணுவ வீரர் உடனடி சத்திர சிகிச்சைக்காக விமான மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டார்.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின் எல்.ரி.ரியினரால் மேற்கொள்ளப்பட்டஇரத கிளைமோர்த் தாக்குதலில் பெரும் தொகையான படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்தினால்கடந்த 4ஆம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கடந்த 48 மணிநேரத்துக்குள் ஆத்திரமூட்டும் செயல்கள் எதுவுமில்லாமல் யாழ்ப் பாணக் குடாநாட்டில் வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நேரத்தில் எல்.ரி.ரியினரால் தனியான இக் கோழைத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த மாதம் 2ஆம் திகதி எல்ரி.ரி.யினர் குறைந்த பட்சம் மூன்று கைக்குண்டுகளை சாவகச்சேரி இராணுவ பதுங்கு குழி மீது எறிந்ததால் நாலு இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளார்கள். இதே மாதிரியாக பாதுகாப்புப் படையினர் மீது மீசாலையில் எல்.ரி.ரி.யினர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் பாதுகாப்பு முனையில் கடமையிலிருந்த சிப்பாயொருவர் காயமடைந்துள்ளார். அதே நாளில் இரவு 7.45 மணியளவில் மாதகல் பகுதியில் ஈ.பி.டி.பியினருக்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் மீது எல்.ரி.ரி.யினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அவ் வீரர் காயமடைந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி பி.ப.6.30 மணியளவில் எல்.ரி.ரி.அணியைச்சேர்ந்த குழுவினர் மாலிச்சந்தி ரெலிகொம் அலுவலகத்தில் காவற்கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதில் மூன்று படையினர் காயமடைந்தனர். அதே தினத்தில் பி.ப.7.20 மணியளவில் எல்.ரி.ரி.யினர் மீசாலைப்பகுதியில் மறைந்திருந்து இராணுவ வாகனமொன்றின் மீது மேற்கொண்ட தாக்குதலில் அவ்வாகனத்தில் பயணம் செய்த இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தகைய பலாத்கார நடவடிக்கைகளின் மூலம் இராணுவத்தினரின் ஆத்திரத்தைத் தூண்டி யாழ்ப்பாணத்தில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த எல்.ரி.ரி.யினர் முயல்வதாகத் தெரிகிறது. இருப்பினும் இராணும் எப்பொழுதும் அதியுயர் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிப்பதுடன் அப்பாவி பொது மக்களது உயிரையும் உடமைகளையும் பாதுகாக்கு முகமாக தற்காப்பு முயற்சிகளில் கூட ஈடுபடாமல் பொறுமை காத்து வருகிறது இத்தகைய சம்பவங்களால் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் யாழ்ப்பாணக் குடா நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் நடவடிக்கைகள் பலப்படுத்தப்படவுள்ளன என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழையால் சேதமடைந்த வீதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

மழை மற்றும் வெள்ளத்தினால் சேதமடைந்த வீதிகள் திருத்தப்படவிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான சில வீதிகளும் மாகாண சபைகளின் ஆளுமைக்குட்பட்ட பெரும்பாலான வீதிகளும் சேதமடைந்திருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 95ஆயிரம் கிலோ மீற்றர் வீதிகள் இருப்பதாகவும் இதில் 17 ஆயிரத்து 500கிலோ மீற்றர் வீதியை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை பராமரித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

# இன்று ஒரு தகவல்

## இல்லாத அனுபவம்

கிராமத்திலே பட்டதாரிப் படிப்பை முடித்த ஒருவர் தொழில் தேடிஅலைந்துவிட்டு, விரக்தியடைந்த நிலையில் ஒரு கோழிப்பண்ணையை நடாத்தத் தொடங்கினார். கோழிப்பண்ணை ஓரளவு நன்றாகவே நடந்துவந்தது. ஆயினும் தான் பட்டப்படிப்பை முடித்துவிட்டுக் கோழிப் பண்ணையை நடத்துவதையிட்டு அவருக்கு ஒரு விரக்தி நிலையும் இருந்தது.அதனால் பிரமச்சாரியாகவே இருந்து வந்தார்.

அவரைத் தெரிந்த பலரும் அவருக்கு இல்லறத் துணையைத் தேடித் தரமுயற்சித்தும், அவர் பிடிவாதமாகக் கட்டைப் பிரமச்சாரியாகவே இருந்தார். அவர் தினமும் கோழிகளை மேய்வதற்காகத் திறந்துவிட்டு விடுவது வழக்கம்.

ஒருநாள் இரைதேடப் போன பெட்டைக்கோழி ஒன்று பக்கத்திலே கிடந்த பாழுங்கிணற்றுள் விழுந்துவிட்டது.

பண்ணைக்காரக் கட்டைப் பிரமச்சாரி பாழுங்கிணற்றில் விழுந்த பெட்டைக் கோழியை வெளியே எடுக்க பெரும் பிரயத்தனங்கள் செய்தார். முடியாமையினால் கோழிக் கூடு ஒன்றை எடுத்து வந்து அதற்குள் கோழித் தீனியைப் போட்டு கூட்டைக் கயிற்றில் கட்டிக் கிணற்றுள் இறக்கி விட்டார்.

ஆனால் கோழி கூட்டுக்குள் செல்லவில்லை. இரண்டு, மூன்று நாட்களாகியும் கோழி கூட்டுக்குள் செல்லாது வெளியிலேயே பதுங்கியபடி நின்றது. இரையைக் கண்டும், கூட்டைப் பார்த்தும் கோழி கூட்டினுள் செல்லாதிருந்ததனைக் கண்ட பண்ணைக்காரர் செய்வதறியாது யோசித்தார்.

மறுநாள் அவர் பண்ணைக்கு அயலில் இருந்த அம்மையார் ஒருவர் இதனை அறிந்து அங்கு போனார். பாழுங் கிணற்றில் இருந்த கூட்டை வெளியே எடுக்கச் செய்தார். அக் கூட்டினுள் சேவல் ஒன்றைப் பிடித்துக் கால்களைக் கட்டிப் போட்டுக் கூட்டைக் கிணற்றுள் இறக்கிவித்தார்.

சேவல் கூட்டுக்குள் இருந்து எழுப்பிய சத்தங் கேட்ட பெட்டைக் கோழி மெல்லத் தாவிப்பறந்து கூட்டினுள்ளே புகுந்தது. அப்பொழுது கூட்டைப் பாழுங்கிணற்றிலிருந்து மேலே தூக்கினார்கள்.சேவலும் பேடும் வெளியே வந்ததும் பெரிதாகச் சிறகடித்துக் கொக்கரித்தன.

இதைக் கண்ட பண்ணையாளருக்குப் பெரும் ஆச்சரியமாகவும், திகைப்பாகவும் இருந்தது. வயதான அம்மையார் பண்ணையாரையும்,பண்ணைக் கோழிகளையும் பார்த்துச் சிரித்தார். அப்பொழுது தான் கட்டைப் பிரமச்சாரியான பண்ணையாளருக்கு ஏதோ ஒன்றைத் தான் இழந்திருப்பதான உணர்வு ஏற்பட்டது.

எவ்வளவுதான் படித்தாலும் அனுபவமில்லாவிடில் அது பெரும் குறைபாடாகவே இருக்கும். இதனையே ஆங்கிலப் பழமொழியான,

“**Experience is letter than the qualification** படிப்பு அறிவிலும் பார்க்க அனுபவமே சிறந்தது என்பது நன்குணர்த்துவதாயுள்ளது.

நன்றாகப் படித்த, பட்டம் பெற்ற ஒருவர் கொ்ழும்புத் துறைமுகத்தில் கூலிவேலை செய்யும் ஒருவரது சரளமான ஆங்கிலப் பேச்சைக் கேட்டு அவனிடம் தனக்கு வேண்டிய சில விபரங்களை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்தார். அதைப் பார்த்த கூலியாள் “சார் எனக்கு ஆங்கிலம் தெரியாது. இங்குவரும் உல்லாசப் பயணிகளிடம் தினமும் பொறுக்கியவற்றையே நான் பேசுகிறேன். இது எனக்கு அனுபவத்தால் வந்தது படிப்பறிவால் வந்ததல்ல” என்றான்.

**நீர்வை மணி**

# எண்ணெய் விநியோகம் ஒழுங்கமைக்கப்படும்

(கொழும்பு)

பாவனையாளர்களுக்கு மானியங்களை வழங்குவதன் மூலம் நாட்டின் எண்ணெய் விநியோகம் ஒழுங்கமைக்கப்படுமென்று ரயில்வே மற்றும் எண்ணெய் வள அபிவிருத்தி அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் விலைகளை அதிகரிப்பதற்கான திட்டமெதுவும் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் நாட்டில் அமைக்கப்படவிருக்கின்றன.

மொத்த மசகு எண்ணெயில் 60சதவீதமான பங்கு நாட்டில் சுத்திகரிக்கப்படும் அதேவேளை, எஞ்சியுள்ள பகுதி 4கோடி டொலர் செலவில் இறக்குமதி செய்யப்படுகிறது.

இதேவேளை,நாட்டை சுற்றியுள்ள கரையோரப் பிரதேசங்களில் எண்ணெய் வளம் சம்பந்தமான ஆராய்ச்சியையும் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இத் திட்டத்திற்கு பெருமளவு முதலீடுகள் தேவை என்றும் இதன் காரணமாக வெளிநாடுகளின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுவது அவசியமாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-9)

# சமாதானத்திற்கான வாய்ப்புகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன

## ‘சண்டே லீடர்’ பேட்டியில் சுரேஷ் எம்.பி

(கொழும்பு)

சமாதானத்திற்கான வாய்ப்புகள் மிக அரிதாகவே காணப்படுவதாக சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

ஒற்றையாட்சியைத் தொடரப்போவதாக பாராளுமன்றத்தில் கூறிய ஜனாதிபதி இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழர் தாயகக் கோட்பாட்டை மறுப்பதன் மூலமும், சமாதானத்திற்கான வாய்ப்புகளை நழுவவிடுகிறார்.

அரசாங்கத்தின் பொறுப்புக்களை ஒப்படைக்கும் விதங்களும் ஜனாதி பதியைச் சுற்றிலும் ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய வினர் நிற்பதும் ஹெல உறுமயவின் ஒரு சிரேஷ்ட உறுப்பினரான கொட்டகதெனிய்வுக்கு பிரதிப் பாது காப்புச் செயலாளராக பதவி வழங்கப்பட்டமையும், இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா நியமனம் பெற்றமையும், ஜனாதிபதி யுத்தமொன்றிற்கு தயாராவதையே காட்டுகிறது என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி அண்மையில் சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.



மஹிந்த ராஜபக்ஷ முற்றுமுழுதான மனமாற்றமொன்றை ஏற்படுத்திக் கொண்டாலன்றி யுத்தமொன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகளே உள்ளன. அவர் இசைவிணக்கமற்றவராக இருந்தபடி சமஷ்டித் தீர்வையும் நிராகரிப்பாராயின் தமிழர் தரப்பினர் எடுக்கும் தீர்மானத்தினை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.சிங்களக் கட்சிகள் மத்தியில் ஒரு பொதுக் கருத்தை ஏற்படுத்திக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேசுவதென்றால், எவ்வகையான பொதுக் கருத்து ஏற்படுத்தப்படப்போகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் நிகழ்ச்சித் திட்டம் என்ன? தென்னிலங்கைக் கட்சிகளுடன் ஒற்றையாட்சிக்கான ஒரு பொது கருத்து ஏற்படுமாயின் நாம் பேச்சு நடத்துவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? வெளியுறவு அமைச்சரும், ஜே.வி.பியினரும் சீன ஆதரவைப் பெறும் ஆர்வம் கொண்டுள்ளனர். இதுவும் ஆபத்தானதாகும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-6)

# ஐ.நா.சபையின் இலங்கைப் பிரதிநிதியை நீக்க வேண்டும்- தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி மைக்கேல் பெர்மியோவை நீக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சருக்கு அந்த அமைப்பின் இணைச் செயலாளரான குணதாச அமரசேகர எழுதியுள்ள கடிதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆழிப்பேரலை மீளமைப்புக்கான விசேட பிரதிநிதி பில் கிளிண்டனின் இலங்கைப் பயணத்தின் போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் அவரை சந்தித்துப் பேசினர்.

இச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தவர் ஐ.நாவுக்கான வதிவிடப் பிரதிநிதி பெர்மியோ தமிழீழ விடுதலைப் புலிகளின் கௌசல்யன் படுகொலைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இரங்கல் தெரிவித்தமைக்கும் பெர்மியோ தான் பொறுப்பு.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு நடவடிக்கைகளில் பெர்மியோ ஈடுபட்டு வருவது தெரியவந்துள்ளது. கிளிநொச்சியில் உள்ள ஐ.நா. செயலகமும் இத்தகைய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

எனவே,வதிவிடப் பிரதிநிதி பெர்மியோவை நீக்க வேண்டும் என்றுள்ளது. (த)

# சந்திரிகா தொடர்பிலான செய்திகள் குறித்து உடன் விசாரணை நடத்துக!

## ‘லேக்ஹவுஸ்’ தலைவருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறித்து லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் அண்மையில் வெளிவந்த அறிக்கைகள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை நடாத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லேக்ஹவுஸ் நிறுவன தலைவருக்கு உத்தரவிட்டுள்ளார்.

லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் அண்மையில் வெளியிடப்பட்ட செய்திகள் ஆதாரமற்றவையென்றும் உண்மைக்குப் புறம்பானவை என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து இந்த விசாரணையை நடாத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்த உத்தரவில் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவரிடமிருந்து மூன்று நாட்களுக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனாதிபதி நிதியத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினமின உள்ளிட்ட மற்றும் சில பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தமையும், அதனை ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஜனாதிபதியின் இவ் உத்தரவுக்கு முன்னர் இது விடயம் தொடர்பில் லேக்ஹவுஸ் நிறுவனமும் விசாரணையை ஆரம்பித்துள்ளது. (ந-8)

# வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நீதிமன்றங்களில் விசாரணைகள் செய்யப்பட்டு வரும் வழக்குகள் நீண்டகாலம் தாமதம் அடைவதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை நீதிசட்ட சீர்திருத்த அமைச்சர் அமரசிறி தொடங்கொட வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவிவரும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் தொகை போதியதாக இல்லையென்று அமைச்சர் தொடங்கொட தெரிவித்தார்.

தற்போதுள்ள 11 நீதியரசர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். மாகாண மட்டத்தில் மேன் முறையீட்டு நீதிமன்றங்களை நிறுவுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, சிறைச்சாலைகளில் நெருக்கடிகளைக் குறைப்பது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

சிறு குற்றங்கள் புரிவோரை சிறைச்சாலைக்கு அனுப்பாமல் வேறுவகையான தண்டனைகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.(த-7)

# தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்க மூவர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மீதான தாக்குதல் குறித்து விசாரணை நடத்த மூவர் கொண்ட குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த 2002ஆம் ஆண்டுக்குப் பின் ஒரே தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்று அரசாங்கம் கருதுவதால் இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் யாழ்ப்பாண நிலைமைகள் மற்றும் கிழக்கு சம்பவங்கள் குறித்து முப்படைத் தளபதிகள் மற்றும் சமாதான செயலகப் பணியாளர் ஜோன் குணரட்ன ஆகியோருடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதனிடையே 6 படையினரது இறுதி நிகழ்வுகள் நடைபெறும் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-4)

# கலை மழலை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் மகாவித்தியாலயத்தின் ‘கலை மழலை’ சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.2.00மணிக்கு பாடசாலைக் கேட்போர் கூடத்தில் அதிபர் திருமதி செ.விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் கலந்துசிறப்பிக்கவுள்ளார். இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இச் சஞ்சிகை இதழாசிரியர் வே.சிவநேசன் கேட்டுக்கொள்கின்றார். (த)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

General Certificate of Examination (Ord. Level)

ENGLISH — 01 hour
Paper - I — Teacher: G.Peter

ALL QUESTIONS SHOULD BE ANSWERED ON THIS PAPER ITSELF.

01. Underline the word with the correct spelling.
Eg: Encourage, Encorage
a. Tradision, Tradition
b. Vernacular, Virnacular
c. Environment, Envionment
d. Univarsity, University
e. Cerimony, Ceremony
f. Neighbour, Neighbore
g. Civilization, Cevilization
h. Architecure, Architexture
j. Manufacture, Menufacture
(10x1/2=5 marks)

02. Change the following into questions.
a. The meting starts at 5.00 p.m.
.................................................................
b. Ravi von the 2nd place for dictation.
.................................................................
c. The eam will be here next week.
.................................................................
d. My amily is in Valaichchenai now.
.................................................................
e. Las week we had our English Day.
.................................................................
(1x5=5 marks)

03. Write the jumbled address properly.
Vavuniya / The Chief Editor / 6th Floor / "Vigiant" / 39, Habarana Road.
...............................
...............................
...............................
...............................
...............................
(1x5=5 marks)

04. Write one sentence about each of the following.
a. Computer
.................................................................
b. Mount Everest
.................................................................
c. Fax
.................................................................
d. Money order
.................................................................
e. Attendance Register
.................................................................
(1x5=5 marks)

05. Write 'A' against the Active Sentences and 'P' against the passive.
a. It was decided at the last moment. ..............
b. We are leaving tomorrow morning. ..............
c. The Parliament will be dissolved after August. ..............
d. Ruban is still in the OL. ..............
e. No proper steps have been taken in this regard. ..............
(1x5=5 marks)

06. Match the words with their definitions. Write the correct Letter in the box provided. One is done for you.

| Words | Answer | Definitions | |
|---|---|---|---|
| INDIGENOUS | | Pertaining to trade. | A |
| BELCHING | | Grant for maintaining a pupil | B |
| NURSERY | | Originating or producing naturally in a country. | C |
| DEDICATE | | To design for the first time by imagination / research. | D |
| ADJECTIVE | | A protection taken to save from certain diseases. | E |
| COMMERCIAL | A | Releasing too much of smoke. | F |
| INVENTION | | Synthetic (op. to natural). | G |
| ARTIFICIAL | | A word added to a noun to describe it. | H |
| SCHOLARSHIP | | Treating differently because of wrong conception. | I |
| DISCRIMINATION | | Devote wholly for a particular cause. | J |
| IMMUNISATION | | A place where immature ones are reared or looked after. | K |

(10x1/2=5 marks)

07. MANNA BOOK SHOP
for books on various subjects, stationery, magazines, news papers etc.
64/10, post office Rd. — TP. 64710
A'Pura. — Date:..........

Write down ten items that could be bought from the book shop.
No marks for the words if the spelling is incorrect.

.............................. ..............................
.............................. ..............................
.............................. ..............................
.............................. ..............................
.............................. ..............................

(10x1/2=5 marks)

08. Rewrite the given paragraph supplying the necesary Punctuation marks (capital letters, full stops, comas etc.)

Father: youre quite right dear im sorry i was being being very selfish here you are everybody the science page for you pathmini foreign news for you ravi heres the readers letters page anne and heres the radio and tv page for you mother

.................................................................
.................................................................
.................................................................
.................................................................
.................................................................
.................................................................
.................................................................
.................................................................

(10x1/2=5 marks)

க.பொ.த (சா / த) மாணவர்களே!
உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும் பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.

## திருமலை புத்தர் சிலைக்கான இராணுவ பாதுகாப்பை விலக்குக

திருகோணமலை திடீர் புத்தர் சிலைக்கு அளிக்கப்படும் இராணுவத்தினது பாதுகாப்பை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ் இளைஞர் அமைப்பு வேணடுகோள் விடுத்துள்ளது.

திடீர் புத்தர் சிலையை வணக்கத் தலமாக கருதினால் அதற்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கலாமே தவிர, இராணுவத்தைக் குவிக்கக்கூடாது என்றும் பனியக்கன பிரதேசத்துக்கான பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இந்தக் கடித நகல்கள் இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் தொடர்பாக பரிசீலிதது வருவதாக அரச செயலகம் தெரிவித்துள்ளது. (த)

## சமுர்த்தி கொடுப்பனவுகளை உடன் பெற்றுக் கொள்க!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆண்டு ஜுலை தொடக்கம் டிசம்பர் வரையான 6 மாதங்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவு களும் பொருட்களும், கடந்த 28ஆம் திகதி தொடக்கம் யாழ்.நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கான ஒதுக்கீடுகள் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளன. இவை கட்டம் கட்டமாகவே வழங்கப்பட இருப்பதால் முதலாவது கட்ட சமுர்த்திககான கொடுப்பனவுகளை விரைந்து பெற்றுக் கொண்டு மிகுதி 5 கட்டங்களையும் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலகத் தின் உதவித் திட்டமிடல் அதிகாரி எஸ். ரவீநதிரசர்மா கேட்டுள்ளார். (ந-36)

## அரசியல் யாப்புச் சபைக்கு அங்கத்தவர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் யாப்புச் சபைக்கான அங்கத்தவர்களை நியமிக்கவென அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இதுபற்றித் தெரிவிக்கையில்,

இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்றார்.

இதைத் தொடர்ந்து சபாநாயகர், எதிர்க்கட்சித்தலைவர், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோரை பிரதமர் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சபையை உடனடியாக அமைக்க வேண்டும் என்ற வகையில் அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-7)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மிகச்சிறந்த தமிழ் படைப்பாளியும் விமாசகருமான சுந்தரராமசாமியின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறை மண்டபத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியில் கலாநிதி ம.இராகுநாதன் மற்றும் எழுத்தாளர்கள் க.சடடநாதன், அ.யேசுராசா ஆகியோா நினைவுரைகளை ஆற்றவுள்ளனர்.

இதேவேளை, மேற்படி நினைவஞ்சலிக்கூட்டம் கடந்த 30ஆம் திகதி நடைபெறவிருந்து பின்னர் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## மக்கள்தொடர்பு அதிகாரியாக அனார்கலி

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவரவின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாக நடிகை அனார்கலி ஆகர்சா நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறந்த நடிகைக்கான சரசவிய விருது அண்மையில் நடிகை அனார்கலிக்கு வழங்கப்பட்டிருந்தது. (த-4)

# வல்லவர்களாக வாழ

# வழிசெய்யும் உடற்பயிற்சி

சுகநலன் என்பது நாம் எப்பொழுதும் கூறிவந்தது போல் உடல், உள, சமூக, ஆன்மீக மேன்மை அடைதலாகும். உடறபயிற்சி என்று இங்கு நாம் குறிப்பிடுவது, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, முக்கியமாக உடல தசைகளை நல்லநிலையில் பேணுவதற்காக, செய்யப்படும் தேக அப்பியாசமாகும். இது நாம் பள்ளிக்கூடத்திற்கு அல்லது, வேலைக்குச் செல்லும் பொழுது சைக்கிள் ஓட்டுவதையோ, சமையலுக்காக அம்மிக்கும், அடுப்புக்கும் நீருக்கும் ஆக நடப்பதையோ, அல்லது யோகாசனப் பயிற்சியையோ உள்ளடக்காது.

உடற்பயிற்சி என்று நாம் குறிப்பிடும் பொழுது, அது எமது தசை நார்களை முறுக்



கேற்றுவதற்கு, நீண்டநேர வேலைக்கு, விளையாட்டிற்கு ஏற்றபடி தாங்கும் திறன் (Endurance) சக்தியை வளர்ப்பதற்கு, உடலை நெகிழ்ச்சியுடன் (Suppleness) இயங்குவதற்கு உதவும் ஒரு முயற்சியாகும். இது, யோகாசனத்தில் இருந்து வேறுபடுகின்றது. யோகாசனம், உடலையும், உள்ளத்தையும் ஒருங்கிணைத்து செயற்பட வைக்கின்றது. இங்கு உடல் உறுதி பெறுவதைவிட தசைகள் தளர்வடைவதற்கு இடமளித்து (Relaxation) உள்ளத்தையும் ஒருநிலைப்படுத்தி சாந்தியையும், சாந்தத்தையும் உணரவைக்கின்றது. இது ஆன்மீக மேம்பாட்டையும், உளநன் நிலையையும் உடல் இயக்கத்தின் ஊடாகவும், தியானத்தின் மூலமாகவும் கட்டி எழுப்புகின்றது. எனவேதான் இங்கு யோகாசனப் பயிற்சிகளை உடற்பயிற்சியில் இருந்து வேறாக்குகின்றோம்.

உடற்பயிற்சியானது, வேறு விதமாக, செயற்படுகின்றது. இங்கு முறையான உடறபயிற்சியின் பின் இருதயம் வேகமாகத் துடிக்க வேண்டும். மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க வேண்டும். வியர்த்து வடிய வேண்டும். உடலில் இம்மாற்றம் நடைபெற்றால் தான் நாம் உடற்பயிற்சி என்று கூறுகின்றோம். இவ்வாறான உடற்பயிற்சி, தசை நார்களுக்கு வலுவூட்டுவது மட்டுமல்லாமல் உடலில் இருக்கும் அனைத்து உறுப்புக்களையும் சிறப்பாக இயங்கத் தூண்டுகின்றது. இதில் முதன்மை பெறுவது இருதயம். இருதயம் ஒரு நிமிடத்திற்கு 72 முறை சுருங்கி விரிவடைந்தாலும் (துடிப்பு), இதனால் ஒரு நிமிடத்திற்கு 18 லீற்றர் இரத்தம் இருதயத்தினூடாக உடலின் பகுதிகளுக்கு அழுத்தத்துடன் அனுப்பப்பட்டாலும், இருதயம் தன் வேலைப்பாட்டிற்கு முடியுரு நாடிகள் எனப்படும் கொரொனரி நாடிகளின் (Coronary arteries) மூலமாகவே குருதியைப் பெற்றுக்கொள்கின்றது. இந்த நாடிகளில், இரத்தோட்டத்திற்கு ஏற்படும் அடைப்பே மாரடைப்பு என்னும் பயங்கரவியாதியை உண்டாக்குகின்றது. தேகப்பயிற்சி, விளையாட்டு என்பன இந்நிலை ஏற்படுவதைத் தடுக்க உதவுகின்றது. இருதயத் துடிப்பு மேற்கூறியவாறு அதிகரிக்க, புதிய இரத்தக் குழாய்கள் உருவாகி (ஓரளவுக்கு Bypass போல்), ஒவ்வொரு இரத்த நாடிகளுடனும தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. எங்காவது அடைப்பு ஏற்பட்டால், உடனே குருதி இவ்வாறான குழாய்களினூடாக ஓடி தேவையான ஒட்சிசன், சக்தியை இருதயத் தசைளுக்கு வழங்கமுடிகின்றது. மாரடைப்பு தடுக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் குருதிக் குழாயில் படிகின்ற கொலஸ்ரோல் போன்ற கொழுப்பு அமிலங்கள் உடலில் அதிகமாக சேர்வதை தடுக்கவும் தேகப் பயிற்சி, விளையாட்டுக்கள் உதவுகின்றன.

மாரடைப்பு வராமல் தடுக்க முக்கிய காரணிகள் அளவான நல் உணவு - உடலியக்கம் - புகைபிடிக்காமை - மது துர்ப்பாவனை இல்லாமை முதலியனவாகும். நாம 20-25 வயதுகளில் எடுத்த அதேயளவு உணவை (சில சமயங்களில் வசதி பெருக இனனும் அதிக உணவை) வயது அதிகரித்த பின்பும் குறைக்காமல் உண்ணுகின்றோம். ஆனால் அந்தக் குறைந்த வயதில, ஓடி, ஆடியவை, வேலை செய்தவை என்பதைக் குறைத்துக்கொள்ளுகின்றோம். எனவே உண்ணுகின்ற அதிகளவு உணவு கொழுப்பாக மாற்றப்பட்டு உடலில் சேமிக்கப்படுகின்றது. குருதி நாடிகளும் இதற்கு விலக்கல்ல. எனவே இந் நாடிகளின் உட்சுவரில் கொழுப்பு அமில படிவங்கள் ஏற்பட்டு உள் விட்டம் குறைந்து இலகுவில் அடைப்பு ஏற்படுகின்றது.

தேகாபபயாசம் இதே காரணத்துக்காகவும், உடலில் ஏற்படுத்தும் வேறு மாற்றங்களினாலும், உயர் குருதி அமுக்கத்தில் ஓரளவு அமுக்கத்தைக் குறைக்கும் அது ஏறத்தாழ 48 மணி நேரங்களுக்குக் குறைந்தே இருக்கும். எனவே தான் ஆகக் குறைந்தது ஒன்றுவிட்ட ஒரு நாளைக்காவது உடற்பயிற்சி செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

உடற்பயிற்சி - விளையாட்டு நிறையை அதிகரிக்காமல் செயற்படுவதால், பருமன் அதிகரிப்பதால் ஏற்படும், நீரிழிவு, மூட்டு வியாதிகள் (Osteo arthritis), முதலியனவும் வராமல் தடுக்க முடியும். முக்கியமாக வயதான காலத்தில் பெண்களுக்கு எலும்புகள் வலுவிழந்து இலகுவாக முறிவடைகின்றன. (ஈஸ்ட்ராஜன் ஓமோன் குறைவது இதற்குக காரணம்) ஆனால் இளம் வயதில் உடற்பயிற்சி செய்து, சுண்ணாம்பு (கல்சியம்) சத்து நிறைந்த உணவு உண்பவர்களுக்கு இந்நிலைமை ஏற்படுவதில்லை. காரணம், அவ் வேளைகளில் சுண்ணாம்பு சத்து இறுக்கமாக எலும்புகளில் படிவதனால் பிற்காலத்திலும் இது தாக்குப் பிடிக்கின்றது.

தேகப் பயிற்சின்போது குருதியோட்டம் மூளைக்கும் நன்றாகச் செல்வதனால் மூளையின் இயக்கமும் ஞாபக சக்தியும் சிறப்பாக அமைவதும் கண்டறியப்பட்டுள்ளது.

உளரீதியாக நாம் தேக அப்பியாசத்தை நோக்குகையில் அது இரண்டு கோணங்களில் நலன் பெருக்குவதைக் காணலாம். நல்ல முறையான தேக அப்பியாசம் - விளையாட்டு என்பவற்றில் ஈடுபடும் பொழுது, உள நெருக்கீடுகள் மறக்கப்படுகின்றன. முழுக்கவனமும் ஒரு சில மணி நேரத்துக்கேனும், இப்பயிற்சியில் இருக்கும். முடிவில், மனம் இலோசாகவும் நெருககீடுகளின் தாக்கம் குறைவாக இருப்பதையும காணலாம். எனவே நெருக்கீடுகள் வியாதியாக மாறுவது தடுக்கப்படுகின்றது. உள நோயாளருக்கும் நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்கு மருந்துகளுடன், விளையாட்டு, நடனம், தேக அப்பியாசம் முதலியன பயன தருகின்றன. மூளைக்குச் செல்லும் இரத்தோட்டத்தின் அதிகரிப்பு, சுத்தமான காற்றின் பிராணவாயு, உடல் ரீதியான செயற்பாடுகளின்போது சுரக்கப்படுகின்ற ஓமோன்கள, நொதியங்கள் போன்ற பலவற்றின் செயல்திறன்களே உளரீதியான மேன்மையை உருவாக்குகின்றது.

சமூக ரீதியாகவும் உடற்பயிற்சி, விளையாட்டு மனித தன்மையை மேம்படுத்த உதவுவது காணக் கிடைக்கின்றது. தலைமைத்துவ பண்பு, குழுவாக செயற்படுதல், விட்டுக்கொடுக்கும் தன்மை, மற்றவர் குறைகளை பெரிதுபடுத்தாமல் ஒத்துவாழும் சிறப்பு, பிறர் தவறுகளை மன்னிதது மறத்தல் முதலியன குழு விளையாட்டுக்கள் மூலம் மனிதன் கற்கும் பாடங்கள். ஆனால் பணமே எல்லாம என்று வாழும் இவ்வுலகில் இப் பண்புகள் தேய்வடைவதையும், விளையாட்டு வீரர் களத்தில் மோத அவர்கள் பேரைச் சொல்லி வெளியில் நிற்போர் தங்களுக்குள் மோதும் அவலம் இங்கு நிகழுகின்றது. இவர்கள் சரியான விளையாட்டு வீரர்களாக வளராததையே இது குறிக்கின்றது. ஒரு விளையாட்டு வீரனுககுச் சாதாரணமாக சட்டம், ஒழுங்கு, விதிகள் முதலியவற்றை மதித்து வாழும் பண்பு வளரும். பிறர் நலம் சமூக உறவு விளங்கும். இங்கு நடைபெறும் கோஷ்டி மோதல்களுக்கு, இவர்கள் விளையாடடு வீரர்களாக இருக்காமல், விளையாடத் தெரியாத பார்வையாளர்களாக மட்டுமே இருப்பது தான் பிரச்சினை. இவர்கள் மற்றவர்களுக்கும் பிரச்சினைக்குரியவர்களாக இருக்கின்றார்கள். விளையாட்டு வீரர்களிலும், பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தும் மைக்டைசன், டெனிஸ மட்டையை தோற்றவுடன் உடைத்து சுழற்றி எறிந்து சிறுபிள்ளை கோமாளித்தனம் காடடும் சில 'வீரர்கள்' இவ்வாறான குழு விளையாட்டுக்களில் பங்கெடுக்காது, மனநிலை தளமபுபவர்களாக இருக்கின்றார்கள். எனவே தான் உடற்பயிற்சி, விளையாட்டுமுதலியவற்றில் குழுவாக இயங்குவது, பழகுவது முக்கியத்துவம் பெறுகின்றது.

நாம் நலமாக விளங்க, உடல், உள்ளம மட்டுமல்லாது சமூக நிலையிலும் இயங்க வல்லவர்களாக இருக்க வேன்டும். எங்கள் எண்ணங்கள், செய்கைகள சமூகத்தவரால் ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளாக, பெரியோரால் 'அறம்', 'ஒழுக்கம்' என்று வலியுறுத்தப்படடவைக்கு அமைவாக இருக்கும் வரை சமூகம் எம்மை ஏற்றுக்கொள்ளும். இவ் வெண்ணங்கள் எம்மில் மேலோங்கி இருக்கும் வரை அது ஆன்மீக வார்ச்சியாகவும் இருக்கும். எனவே தகுந்த உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் எம்மை நல்லவாகளாக, வல்லவர்களாக நலமுடையோராக ஆக்கும். படிப்பு, படிப்பு என்று பிள்ளைகளை விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுத்தாதது பெறறோர்களை இனியாவது இது குறித்தும் கவனமெடுத்து தமது பிள்ளைகளை மனிதம் உள்ள மனிதர்களாக ஆக்குவதே முதன்மை பெற வேண்டும் என்று எண்ண வைப்பது உங்கள் பொறுப்பு.

வைத்திய கலாநிதி
செ.சு.நச்சினார்க்கினியன்

-நன்றி சுகமஞ்சரி

# ஆயுத பலமிருப்பினும் இராணுவத்தின் எண்ணிக்கை சந்தேகமளிக்கிறது

-ஹரி குணதிலக

(கொழும்பு)

யுத்தம் நடத்த ஆயுத பலம் இருக்கலாம். ஆனால் இலங்கை இராணுவத்தினரது எண்ணிக்கையில்தான் எமக்கு சந்தேகம் உள்ளது என்று விமானப் படை முன்னாள் தளபதி ஹரி குணதிலக கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு ஹரி குணதிலக கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தம் உருவாவதற்கான அறிகுறிகள் தற்போது தோன்றி உள்ளன. இராணுவம் உரிய ஆயுதங்களைப் பெற்றிருக்கவில்லை என்று நாம் கூறவில்லை. யுத்தத்தை தொடங்குவதற்கான வலிமையுடனே உள்ளனர். ஆனால் இராணுவத்தினரின் எண்ணிக்கை தான் சந்தேகப்பட வைக்கிறது.

இராணுவத்தினர் சிலருக்கு 2 தொகுப்பு உடையோ தலைக்கவசமோ கூட கிடையாது.

1980 முதல் 2003ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் புள்ளிவிவரப்படியே மொத்தம் 51 ஆயிரம் பேர் இராணுவத்தை விட்டு ஓடிப் போய் இருக்கிறார்கள். அதாவது ஆண்டுககுச் சராசரியாக 1,500 பேர் இராணுவத்தை விட்டு ஓடிப்போய் இருக்கிறார்கள். ஆனால் 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம ஏற்படுத்தப்பட்ட ஆண்டில் மட்டும் 8,800 இராணுவத்தினர் விலகியுள்ளனர். யுத்த நிறுத்த ஒப்பந்தகாலத்தில் இது பாரிய எணணிக்கையாகும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரையில் யுத்தம் விரைவில் தொடக்கப்படக்கூடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது அடுத்த ஆண்டின் தொடக்கத்திலோ, மத்தியிலோ இறுதியிலோ இருக்கலாம். ஆனால் அநேகம் மாாச், ஏப்ரல் மாதங்களில் இது நடைபெறக்கூடும்.

அமைதிப் பேச்சுக்கள் தோல்வியடைந்தால் பேச்சுக்களிலிருந்து வெளியேறும் விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடங்குவார்கள். இந்த யுத்தமானது முதலில் ஒருவர் கொலை, இருவர் கொலை, கண்ணிவெடித் தாக்குதல், முகாம் மீதான தாக்குதல், சோதனைச் சாவடிகள் மீதான தாக்குதல்கள் என்று நாளாந்தம் தொடங்கி பினனர் விரிபுபடுத்தப்படக்கூடும் என்றார்.

இதனிடையே இலங்கையின் முப்படைகளும் மிகவும் தயார் நிலையில் வைககப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் தலைமைப் பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்கள் அனைத்தும் யுத்தம் நடக்கக் கூடும் என்பதை உள்வாங்கியே மஹிந்த ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு குறித்த விடயம் முக்கியமாக விவாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

கடந்த நவம்பர் 8ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் ரூ.69 பில்லியன் பாதுகாப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதைவிடக் கூடுதலாக மஹிந்த ராஜபக்ஷ ஒதுக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது. (த-4)

## அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நியாப் -II திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தின் மையப் பகுதியான கோண்டாவில் வடகிழக்கு அன்னுங்கை வீதியில் பொது மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெற்றது.

அடிக்கல்லை நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எஸ்.தெய்வேந்திரா நாட்டினார். (ற-36)

# புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

## முடிவுத் திகதி பெப்.15 என அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் பதிவு செய்துகொண்டு வெளிநாடு சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்கும் செயற்திட்டம் 2006ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அடுத்த ஆண்டு புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம தற்போது கோரியுள்ளது.

2005ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், 2004ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையல் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த பலகலைக்கழகம் அல்லது உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் ஆகியோருக்கு இப் புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும், க.பொ.த.உயர்தரப பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவும், புலமைப்பரிசில் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதாக வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுவதற்குத் தகுதியான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம திகதிக்கு முன்னா இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பணியகத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ற-9)

# கான்பூர் டெஸ்ட் இரத்து
# 3ஆவது போட்டி அகமதாபாத்தில்

இந்தியா- இலங்கை அணிகளிடையே கான்பூரில் நடப்பதாக இருந்த 3ஆவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்துக்கு மாற்றப் படுவதாக கிரிக்கெட் சபை அறிவித்தது. இப்போட்டி டிசம்பர் 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடக்கும். மும்பையில் நேற்று கூடிய கிரிக்கெட்சபை சுற்றுப் பயண அமைப்புக்குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

அகமதாபாத்தில் நடப்பதாக இருந்த இந்தியா- இங்கிலாந்து டெஸ்ட் போட்டி மொகாலிக்கு மாற்றப்படுகிறது. அதேசமயம் மொகாலியில் நடக்கவிருந்த இந்தியா- இங்கிலாந்து ஒருநாள் போட்டி ஜாம்ஷெட் பூரில் நடக்கும் என்றும் அறிவித்துள்ளனர்.

இங்கிலாந்து அணி இந்திய சுற்றுப் பயணத்தின் போது மும்பை, நாக்பூர் மற்றும் மொகாலியில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும். மூன்று டெஸ்ட் போட்டித் தொடரின் முடிவில் 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் நடக்கவுள்ளது. இப் போட்டிகள் இந்தூர், கோவா, டெல்லி, கவுகாத்தி, கொச்சி, பரிதாபாத், ஜாம் ஷெடபூரில் நடக்கவுள்ளன. இங்கிலாந்து தொடருக்கான போட்டி அட்டவணை இன்று அறிவிக்கப்படும். (த-39)



சாம்பியன்ஸ் டிராபி ஹொக்கி இறுதிப் போட்டியில் நெதர்லாந்து அவுஸ்திரேலியாவை 1-0 என தோற்கடித்து கோப்பையை வென்றது. வெற்றிக் கோப்பையுடன் நெதர்லாந்து தலைவி மிங்கி பாயிஜ்.

# உலக செஸ் கோப்பை போட்டி
# ரஷ்ய வீரருடன் ஹரிகிருஷ்ணா சமநிலை

ரஷியாவில் நடைபெற்றுவரும் உலக செஸ் கோப்பைக்கான போட்டியின் மூன்றாவது சுற்றில் ரஷ்ய வீரர் அலெக்ஷி திரீவ் உடன் சமனிலை கண்டார் இந்தியாவின் பி.ஹரிகிருஷ்ணா.

ஒவ்வொரு வீரரும் ஒரு சுற்றில் 2 ஆட்டங்கள் விளையாடவேண்டும். 3ஆவது சுற்றின் முதல் ஆட்டத்தில் அதிர்ச்சி தரும் வகையிலான முடிவுகள் ஏதும் இல்லா விட்டாலும் ஹோலந்து வீரர் லோக் வான டம் அஜர்பைஜான் வீரர் தைமூர் ரட்ஜ போவ் தோல்வியுற்றது, பலரின் பார்வையை பெற்றிருந்தது.

முன்னிலை வீரர்கள் பலர் பங்கேற்றுள்ள இப்போட்டியில், 3ஆவது சுற்றுக்கு முன்னேறிய வீரர் ஹரிகிருஷ்ணா ஒருவரே. இரண்டாவது சுற்றுடன் கே.சசிகரண, சூர்யசேகர், கங்குலி ஆகியோர் வெளியேறினர். (த-39)

# ஆசிய கோப்பை போட்டி பிற்போடப்பட்டது

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பெப்ரவரி 16-28ஆம் திகதி வரை நடப்பதாக இருந்த ஆசிய கோப்பை போட்டி கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் சரத்பவார் கூறினார்.

மும்பையில், நேற்றுமுன்தினம் கிரிக்கெட் சுற்றுப்பயண அமைப்புக்குழு கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிரிக்கெட் வீரர்களுக்கான புதிய ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யபபடும். இந்திய அணி பாகிஸ்தான் தொடருக்கு புறப்படும் முன்பாக ஒப்பந்தம் கையெழுத்தாகிவிடும்.

இந்தியா- பாகிஸ்தான் அணிகளிடையே 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை டெஸ்ட் போட்டிகள் நடத்தப்படும்.

இதுகுறித்து பாக். கிரிக்கெட் சபைத தலைவர் ஷகாரியர்கானிடம் பேசியுள்ளேன என்றார். (த-39)

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியல்
# பாகிஸ்தான் 4வது இடத்திற்கு முன்னேற்றம்

எல்.ஜி.- ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் பாகிஸ்தான் அணி 4ஆவது இடத்திற்கு முன்னேறி இந்தியாவை நெருங்கியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) நேற்று முன்தினம் வெளியிட்ட டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்த விபரம் தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் பட்டியலில் 7ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் அணி, 4ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. பாகிஸ்தான் அணி தற்போது 103 புள்ளிகள் பெற்றுள்ளது. இங்கிலாந்திற்கு எதிரான தொடரில் 2-0 என்ற கணக்கில் வெற்றதன் மூலம் இந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது.

அண்மையகால தொடர் வெற்றி மூலம் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து மற்றும் இலங்கை ஆகிய அணிகளை முன்னேறியுள்ளது பாகிஸ்தான். தற்போது பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ள இந்திய அணியை விட, பாகிஸ்தான் அணி 9 புள்ளிகள் பின்தங்கியுள்ளது. அடுத்ததாக ஜனவரி மாதம் இந்திய- பாகிஸ்தான் அணிகள் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவிருக்கின்றன. இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி வெற்றிபெறும் பட்சத்தில் கடந்த 4 வருடங்களில் எட்டாத இரண்டாவது இடத்தை எட்டும் வாய்ப்பு உள்ளது. ராகுல் டிராவிட் தலைமையிலான இந்திய அணி இலங்கைக்கு எதிரான தொடரில் 1-0 அல்லது 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றால் 113 புள்ளிகள் பெற்று இங்கிலாந்து அணியுடன் சமநிலை பெறும். ஆனால் புள்ளிகளை மூன்று டெசிமல் அளவிற்கு கணக்கிட்டாலதான் இந்திய அணி 2ஆவது இடத்திற்கு முன்னேறும்.

அதேபோல இலங்கை அணி 3-0 என்ற கணக்கில் தொடரை வென்றால், இந்தியாவை பின்னுக்குத் தள்ளி 3ஆவது இடம்பெற வாய்ப்புள்ளது. 2-0 என்ற கணக்கில் இலங்கை அணி தொடரை வெற்றி பெறும் பட்சத்தில் 106 புள்ளிகளுடன் இரு அணிகளும் சமநிலை பெறும் வாய்ப்பு உள்ளது. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து முதலிடத்திலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆஷஸ் தொடரில், அவுஸ்திரேலியாவை வென்றதன் மூலம் இங்கிலாந்து அணி இரண்டாவது இடத்தில் உள்ளது. பாக். தொடரில் அந்த அணி தோற்றதால் புள்ளிகள் குறைந்தபோதிலும் தொடர்ந்து இரண்டாவது இடத்தில் இருக்கின்றது.


இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் 6-1 என்ற கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்றதன் மூலம் ஒருநாள் சர்வதேச போட்டி தரவரிசையில் முன்னேறியது. தற்போது டெஸ்ட் தொடரிலும் இந்திய அணி வெற்றிபெற முயற்சித்து வருகிறது. ஆனால் டெஸ்டில் இந்திய அணி, இலங்கை அணியின் கடும் சவாலை சந்திக்கவிருக்கிறது. (த-39)



ஸ்லோவாக்கியாவில் நடைபெறும் டேவிஸ் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் குரோஷியா அணி கோப்பையை தட்டிச் சென்றது.

# விளையாட்டு செய்திகள்

# வருணபகவானின் விடுதலையால் 4ஆவது நாள் டெஸ்ட் ஆரம்பம்



இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி சென்னை எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருந்தது. எனினும், போட்டியின் முதல் மூன்று தினங்கள் மழை காரணமாக நடைபெறவில்லை என்பது தெரிந்ததே.

எனினும், நான்காம் நாளான நேற்று காலை 9.00 மணிக்கு போட்டியை ஆரம்பிக்க இருந்தபோது மைதானம் ஈரப்பதமாக இருப்பதாக நடுவர்கள் அறிவித்தனர். போதிய வெயில் இருந்தமையால் போட்டி 3.00 மணிக்கு ஆரம்பித்தது. எனினும் சீர் அற்ற காலநிலை காரணமாக போட்டி குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் ராகுல் டிராவிட் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இதனடிப்படையில் முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வரேந்திர சேவாக், கௌதம் காம்பீர் ஆகியோர் களமிறங்கினர்.

சேவாக் வேகமாக ஆட்டத்தை ஆரம்பித்த போதிலும் ஸ்கோர் 13 ஆக இருந்த போது காம்பீர் ஓட்டமெதனை யும் பெறாமல் சமிந்த வாஸின் பந்தில் போல்ட் ஆகி ஆட்டமிழந்து சென்றார். பின்னர் சேவாக் குடன் இணைந்த டிராவிட் நிதானமாக துடுப்பாட மறுமுனையில் சேவாக் 36 ஓட்டங்களுடன் வாஸின் பந்து வீச்சில் அத்தபத்துவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து ராவிட்டுடன் சச்சின் இணைந்து ஆடிக்கொண்டிருந்தனர். நேற்றைய போட்டி இடைநிறுத்தப்பட்ட போது இந்திய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (த-39)

# ஈராக் மீது அமெ.வீசிய பொஸ்பரஸ் குண்டுகள்! இத்தாலி ஒளிபரப்பிய வீடியோவால் சர்ச்சை!

(வோஷிங்டன்)

ஈராக்கில் பலூஜா நகர் மீது கடந்த ஆண்டு அமெரிக்கப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தின. அப்போது அப்பாவி மக்கள் மீது வெண் பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டதாகவும், அதில் பலர் கொல்லப் பட்டதாகவும் தற்போது புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

ஈராக்கில் சதாம் ஆட்சியை அகற்ற அமெரிக்க தலைமையிலான பன்நாட்டுப் படைகள் அந்நாடு மீது போர் தொடுத்து வெற்றிபெற்றன. ஈராக்கில் தற்போது மாற்று ஆட்சி ஏற்பட்டபோதிலும், சதாம் ஆதரவாளர்கள் கொரில்லா போர் முறையில் அவ்வப் போது அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல் நடத்திவருகின்றன.

அனைத்து நாட்டு இராணுவப் பிரிவினரிடமும் வெண் பொஸ்பரஸ் குண்டுகள் கைவசம் இருக்கும். புகை மூட்டத்தை ஏற்படுத்தவும், இலக்குகளை அடையாளம காணவும் இவ்வகைக் குண்டுகளை இராணுவத்தினர் பயன்படுத்துவர். இரசாயன வகை குண்டாக இது கருதப்படுவதால் மக்கள் மீதும், வீரர்கள் மீதும் இவற்றை வீச சர்வதேச அளவில் தடை உள்ளது. இத்தகைய குண்டுகளை வீசினால் கடுமையான உயிர் சேதம் ஏற்படும். மேகம் போல் பரவும் வெண் பொஸ்பரஸ் மக்கள மற்றும் விலங்குகள் மீதுபட்டு உடனடியாக எரியத் தொடங்கி விடும். பொஸ்பரஸ் மறையும் வரை தீ எரிந்து கொண்டே இருக்கும். எனவே இதை பயன்படுத்த கடும் தடை உள்ளது.

ஈராககில் பலூஜா நகரைக் கைப்பற்ற கடந்த ஆண்டு அமெரிக்கப் படைகள் வான்வழி தாக்குதல் நடத்தின. அப்போது விமானங்கள் மூலம் பலூஜா நகர மக்கள் மீது வெண் பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டன. ஏராளமான மக்கள் தீயில் கருகி இறந்தனர் என்று இத்தாலிய 'டிவி'யில் கடந்த மாதம் ஒரு டாக்குமென்டரி படம் ஒளிபரப்பப்பட்டது. இந்த டாக்குமென்டரி அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனுக்கு பெரும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியது. முதலில் வெண் பொஸ்பரஸ் குண்டுகளே வீசப்படவில்லை என்று பென்டகன் மறுத்தது.

ஆனால்,வெண் பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்ட படங்கள், தீக்காயம் அடைந்து இறந்தவர்களின் உடல்கள், தீக்காயம் அடைந்தவர்களின் படங்கள் ஆகியவை அந்த டாக்குமென்டரியில் வெளியிடப்பட்டதால் அமொிக்க வெளியுறவு அமைசசகம் இராணுவ உயர் அதிகாரிகளின் தவறான கருத்துகளை வாபஸ் பெறுவதாக அறிவித்தது.

இதுபோன்ற முரண்பாடான அறிக்கைகளால் வெளிநாட்டு மீடியாக்களும், இணையத்தளங்களும் 'தடைசெய்யப்பட்ட இரசாயன வெடிகுண்டுகளை ஈராக மீது அமெரிக்கா பயன்படுத்தியதாக' செய்திகளை வெளியிடத்தொடங்கிவிட்டன. இப்பிரச்சினை குறித்து விசாரணை நடத்தப்படும் என ஈராக் அரசும், இந்த சம்பவம குறித்து கவலை தெரிவிப்பதாக ஐ.நா. அமைப்பும் கூறியுள்ளன.

போர் தளபாடங்களைப் பற்றிய தகவல்களை அளித்து வரும் குளோபல் செக்யூரிட்டி என்ற இணையத் தளத்தை நடத்தி வரும் அமெரிக்காவை சேர்ந்த ஜான் பிக்கி என்பவர் இதுகுறித்துக் கூறுகையில், அமெரிக்க அதிகாரிகளின் முரண்பாடான தகவல்களால் விஷயத்தை மூடி மறைக்க அரசு முயற்சிக்கிறது என்ற எணணம் பரவலாகத் தோன்றத் தொடங்கி விட்டது. அமெரிக்காவினர் தங்களது பழையசேட்டையை மீண்டும் துவக்கி விட்டதாகவே சர்வதேச அளவில் பேசத் தொடங்கி விட்டனர் என்றார்.

பலூஜா நகர் மீது கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெண் பொஸ்பரஸ் குண்டுகள் வீசபபட்டன. டிசம்பரில் இதுகுறித்து எதிர்த்து கருத்துக்கள் வெளிவர தொடங்கியதும், அமெரிக்க இராணுவம், 'இரவில வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்காகவே வெண் பொஸ்பரஸ் குண்டுகள் வீசியதாக' கூறி பிரச்சினைக்கு தற்காலிக முற்றுப்புள்ளி வைத்தது.

ஆனால், இத்தாலி 'டிவி'யில் கடந்த மாதம் இது தொடர்பான டாக்குமென்டரி படம் வெளியானதும் இத்தாலி மற்றும் பிாிட்டனுக்கான அமெரிக்கத் தூதர்கள், எதிரிகள் மீதே அந்தக் குண்டுகள் வீசப்பட்டன. அப்பாவி மக்கள் மீது வீசப்படவில்லை என மற்றொரு தகவலை வெளியிட்டனர்.

இறுதியாக கடந்த வாரம் புஷ் அரசு பலூஜா நகரில் எதிரிகள் மீது நேரடியாக வெண் பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டதாக ஒப்புக்கொண்டது. எதிரிகள் மீது அநதக் குண்டுகள் வீசுவதில் சட்டப்படி எந்தத் தவறும் இல்லை என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க அரசின் இது போன்ற முரண்பாடான தகவல்களால இரசாயனக் குண்டுகளை அது பயன்படுத்தியதாக புதிய சர்ச்சை தற்போது எழுந்துள்ளது. (ற)



ரஷ்யா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு, மொஸ்கோவில் விசேட அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. இவ் அணிவகுப்பு மரியாதையின் போது...

WORLD NEWS உலக தரிசனம்

# ஈராக்கில் குண்டுவெடிப்பு 19 இராணுவத்தினர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் சாலையோரம் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் அந்நாட்டு இராணுவ வீரர்கள் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு வடக்கே 100 கி.மீ. தொலைவில் அதாய்ம என்ற இடம் உள்ளது. ஈராக் இராணுவ வீரர்கள் நேற்று முன்தினம் இந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.



அப்போது சாலையோரம மறைத்து வைக்கபபட்டிருந்த சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்று திடீரென வெடித்துச் சிதறியது. இதில் ஈராக் இராணுவ வீரர்கள் 19 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும இரண்டு பேர் காயமடைந்தனர்.

இதனிடையே ஈராக் மோசூல் விமான நிலையத்தில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் மாலை தீவிரவாதிகள் ராக்கெட் தாக்குதல் நடத்தினர்.இதில் இரண்டு அமெரிக்க வீரர்கள் காயமடைந்தனர். (ற)

# அடுத்த மூன்று ஆண்டுகளில் சீனாவில் 12000 நிலக்கரி சுரங்கங்கள் மூடப்படும்

(பீஜிங்)

சீனாவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் சுமார் 12ஆயிரம் சிறிய நிலக்கரி சுரங்கங்கள் மூடப்படும் என்று அந்நாட்டு நிலக்கரி சுரங்க பாதுகாப்பு மேற்பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி சீனாவில் உள்ள ஹெய்லாங் ஜியாங் மாநிலத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான நிலக்கரி சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் 169 பேர் பலியானார்கள். இந்தச் சமபவத்தின் எதிரொலியாக கடந்த சனிககிழமை நிலக்கரி சுரங்க் தொழிற்சாலைகளுக்காக கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீன நிலக்கரி சுரங்க பாதுகாப்பு மேறபார்வையாளர் ஜியோ தியோஜிய், சீனாவில் மொத்தம் 24,000 ஆயிரம் நிலக்கரி சுரங்க தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளின் மூலம் ஆண்டிற்கு 10தொன் முதல் 30,000தொன் எடையுள்ள நிலக்கரி வெட்டியெடுக்கப் படுகின்றன.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் பெரிய அளவில் சுரங்க விபத்து ஏதும் நடைபெறவில்லை இருந்தாலும் இன்னும் மூன்று ஆண்டுகளில் 12,000 சிறிய நிலக்கரி சுரங்க தொழிற்சாலைகள் மூடப்படும் என்று கூறினார்.

சீனாவில் நாள்தோறும் நிலக்கரி சுரங்க தொழிலாளர்கள் 18பேர் உயிரிழந்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன என்றும் கூறிய ஜியோ தியோஜிவ், இந்த விபத்துக்கள் பெரும் பாலும் சிறிய நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலைகளிலேயே நடைபெறுகின்றன. இந்தச் சிறிய தொழிற்சாலைகள் மூலம் நாட்டின் நிலக்கரி உற்பத்தியில் 10 சத வீதம் மட்டுமே தயாரிக்கப்படுகிறது என்றும் அதனால் சிறு நிலக்கரி தொழிற்சாலைகளை மூடிவிட முடிவு எடுக்கப் பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ற)



இத்தாலியின் வடக்கு பகுதியில் பெய்த கன மழையால் அங்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. வேனிஸ் நகரிலுள்ள செயின்ட்-மார்க் சதுக்கத்தை பார்க்க வெள்ள நீரையும் பொருட்படுத்தாமல் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தனர்.

# காஸா மீது இஸ்ரேல் ராக்கெட் வீச்சு

பலஸ்தீனத்தில் காசா பகுதியில் உள்ள கட்டடம் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் ராக்கெட் வீசி தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையே சமாதானம் ஏற்படும் வகையில் காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் குடியேற்றங்களை இஸ்ரேல் ஏற்கனவே அகற்றியது. ஆனால் பலஸ்தீனர்கள் சுதந்திரமாக நடமாட முடியாதபடி ஏற்கனவே இஸ்ரேல் விதித்திருந்த பல தடைகள் இன்னமும் நீடிக்கின்றன.

நேற்று முன்தினம் பலஸ்தீனம் காசா பகுதியில் உள்ள முஸ்லிம் அறக்கட்டளைக் கட்டடம் மீது இஸ்ரேல் ராக்கெட் குண்டுகளை வசி தாக்குதல் நடத்தியது. அதற்கு இஸ்ரேல் காரணம் கூறும்போது தெற்கு இஸ்ரேலில் மக்கள் வாழும் பகுதியில் காசா பகுதியைச சேர்ந்த பலஸ்தீன தீவிரவாதிகள் 3 ராக்கெட் குண்டுகளை வீசினர் என்றும் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் எதிர்தாக்குதல் நடத்தப்படடது எனவும் விளக்கியது.

இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில் கடந்த ஒக்டோபர் மாதத்திற்குப் பிறகு காசா பகுதியில் இலக்குகளை குறிவைத்து நடத்தப்பட்ட முதல் தாக்குதல் நேற்று முன்தினம் நடந்தது தான் என்றார்.

பலஸ்தீனர்கள் தரப்பில் நேற்று முன்தினம் சொல்லப்பட்ட விளக்கத்தில், கடலில் மீன்பிடித்த பலஸ்தீன மீனவரை இஸ்ரேல் கடல் ரோந்துப்படை சுட்டுக் கொன்றது என்றும் அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் ராக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்பட்டது.

ஆனால் தடைபோடப்பட்ட கடல் எல்லைப் பகுதிக்குள் அந்த மீனவரின் படகு அத்துமீறி நுழைந்தது.

அப்போது மேற்கொள்ளப்பட்ட எச்சரிக்கைத் துப்பாக்கிச் சூட்டை மீனவர் கண்டுகொள்ளாததால் அவர் சுட்டுக் கொலலப்பட்டார் என்று இஸ்ரேல் பதில் கூறியுள்ளது. (ற)

# இங்கிலாந்து அரச குடும்பத்திலும் மாமியார் - மருமகள் மோதல்

(இலண்டன்)

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் மகன் இளவரசர் சாள்ஸ் சமீபத்தில் தனது நீண்டநாள் காதலி கமீலாவை திருமணம் செய்துகொண்டார். அரச குடும்பத்தில் மருமகளாகச் சென்ற கமீலா மீது ராணி எலிசபெத்துக்கு இன்னும் பற்றுதல் ஏற்படவில்லை.

சாதாரண குடும்பத்தைப் போலவே ராணி குடும்பத்திலும் மாமியார் மருமகளுக்கு இடையே தகராறு ஆரம்பித்து விட்டது. குடும்பத்தில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளில் கமீலாவை ராணி புறக்கணித்தார்.

ராணியின் குடும்பத்தினரின் நன்மைக்காக முக்கிய தேவாலயங்களில் சிறப்பு பிரார்ததனைகள் நடப்பது வழக்கம். ராணி, அவரது கணவர், இளவரசர் உட்பட ஒவ்வொருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களுககு கடவுள் அருள் புரியட்டும் என்று பிரார்த்திப்பது வழக்கம்.

ஆனால் இந்தமுறை நடக்க இருக்கும் பிரார்த்தனையில் கமீலாவின் பெயர் இடம்பெறவில்லை. இது அந்நாட்டுப் பாராளுமன்றத்திலும் பிரச்சினையை கிளப்பியுள்ளது. ஆனால் ராணி இன்னும் தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை.

கார் விபத்தில் மரணம் அடைந்த டயானா முன்பு இளவரசரை திருமணம் செய்த உடனேயே டயானாவின் பெயர் இந்தப் பிரார்த்தனைப் பட்டியலில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

மனதில் தோன்றும் நல்ல கருத்துக்களைச் சொல்வதற்கு தயங்காதே. நல்ல கருத்துக்கள் இன்றில்லாவிட்டாலும் நாளை உலகம் ஏற்கும்.

*- சுவாமி இராமதாசர்*

வலம்புரி

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதிக்கு படையினர் அழுத்தம் கொடுக்கவேண்டும்

யாழ். மாவட்டத்தின் தற்போதைய சூழ்நிலை சமாதானத்திற்கு ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை.

சம்பவங்கள் சிறியவை என்ற நினைப்பில் அரசு பேசாதிருக்குமாயின் அதன்முடிபு பாரதூரமானதாக அமைவது தவிர்க்கமுடியாததாகிவிடும். தென்னிலங்கை ஆட்சிபீடத்தினரால் வடபுலத்தின் நிலைமையைப் புரிந்துகொள்வது கடினமானதே.

மாளிகைகளிலும், குளிரூட்டப்பட்ட அறைகளிலும் படுத்துறங்கும் பிரகிருதிகளால் யுத்த சூழ்நிலையை, வாழ்விடங்களின் இழப்புக்களை, அகதி வாழ்க்கையின் பரிதாபத்தை உணரமுடியாது.

அவர்கள் அங்கிருந்தவாறு சமாதானத்தைக் குழப்புவதுபற்றி சிந்திக்கின்றார்கள். யுத்தநிறுத்த உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்யவேண்டும். நோர்வேயின் அனுசரணையைக் கைவிடவேண்டும் என்றெல்லாம் திட்டம்போடும் ஜனாதிபதி மகிந்தவும் அவரது கூட்டாளிகளான ஜே.வி.பியும் யாழ்ப்பாணத்தில் குண்டுவெடித்தவுடன் கொழும்பின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு படையினருக்குக் கூறுகின்றனர்.

குண்டுவெடிப்பது யாழ்ப்பாணத்தில், உயிரிழந்தவர்கள் படையினர். அவ்வாறாயின் கொழும்பின் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டியது ஏன்? இந்த உண்மையை யாழ்ப்பாணத்தில் உள்ள படையினர் புரிந்துகொள்ளவேண்டும்.

தங்களின் சுகபோக வாழ்க்கைக்கு ஊறு ஏற்படாத வகையில் கொழும்பில் பாதுகாப்பை உறுதிசெய்ய முயற்சிக்கும் ஆட்சியாளர்களுக்கு படையினரின் மரணம் குறித்து எந்தவித கவலையும் இல்லையென்றே கூறவேண்டும்.

எனவே தமது உயிர் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக சமாதானப் பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளுடன் உடனடியாக ஆரம்பிக்குமாறு படையினர் அரசுக்கு அழுத்தம்கொடுக்கவேண்டும்.

கடந்த 20 வருடகாலமாக தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்ட யுத்தத்தில் எதுவித அர்த்தமும் இல்லையென்ற உண்மையை அனுபவத்தில் கண்டவர்கள் படையினரே.

பொதுமக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதால் மக்கள் எத்துணை துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின் றனர் என்ற விடயம் படையினருக்குத் தெரியாமலல்ல.

எனினும் அரசின் அர்த்தமற்ற கட்டளைகளை நிறைவேற்றும் சட்டத்தன்மையை மட்டும் படையினர் செய்வது நாட்டில் அழிவையும் அவலத்தையுமே ஏற்படுத்தும்.

கொழும்பின் தலைமையகத்தில் இருக்கும் படைத்தளபதிகள் தமது பதவிகளைக் காப்பாற்றுவதற்காகவும், ஆளும்தரப்புக்கு விசுவாசமாகவும் செயற்படுவதையே இலக்காகக் கொண்டவர்கள். எனவே அவர்களிடம் இராணுவச் சிப்பாய்களின் உயிரிழப்புப் பற்றிய கழிவிரக்கம் இருக்கமாட்டாது.

ஆக படைச்சிப்பாய்கள் அரசுக்கு தமது எதிர்ப்பைக் காட்டுவதன் மூலமாகவும், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை நடத்தி உடனடியாக நிரந்தரத் தீர்வைக் காணுமாறு அழுத்தம் கொடுப்பதன்மூலமே தங்களின் பெறுமதியான உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

# இலங்கைத் தமிழர்களின் தன்னாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்

## அமெரிக்காவின் 'போஸ்ரன் குளோப்' இதழ் கருத்து

(கொழும்பு)

இலஙகையில் தமிழர்களது தன்னாட்சி உரிமைகளை அங்கீகரிக்க வேண்டுமென்று அமெரிக்க செய்தி இதழ் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

நியோக்பன்ஸ் குடும்பத்தின் இதழான 'போஸ்ரன் குளோப்'என்ற இதழே இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளது.

காலணித்துவ ஆட்சிக்குப் பின்னரான இன விடுதலைப் போராட்டங்களான இந்திய-காஷமீர், இஸ்ரேல்-பலஸ்தீனம், ருவாண்டா-சூடான் பிரச்சினைகளின் பக்கம் மேற்குலகம் அக்கறை காட்டியிருப்பதாகத் தெரிவித்திருக்கும் அந்த இதழ் இலங்கைத் தீவில் இரண்டரை தசாப்தங்களாக நீடித்துவரும் பிரச்சினையை மேற்குலகம் கண்டுகொள்ளாதது பெரும் கவலைக்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிப்பதாகவும், பெரும்பான்மை சிங்களப் பெளத்தர்களின் கட்டுப்பாட்டின் கீழான ஒற்றையாட்சியை நீடிக்க வேண்டுமென்றும், ஆழிப பேரலை மீளமைப்புக்காக புலிகள்,அரசாங்கம் இணைநது மேற்கொண்ட ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை கலைத்துவிடுவதாகவும்,நோர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகளை நீக்கு வதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த உரையைத் தொடர்ந்து பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது வருடாந்த மாவீரர் உரையில் புதிய ஜனாதிபதிக்கும் புலிகளுக்குமிடையே பாரிய கொள்கை இடைவெளியிருப்பதாகவும் தமிழர்கள் தங்களது பொறுமையை இழந்துவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டதுடன், தமிழர் தாயகத்தில் தனனாட்சி அதிகாரம் தொடர்பாகவும் பல கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இந்த வகையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் விரைவில் அரசியல் தீர்வுததிட்டத்தை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டுமென்றும் புதிய அரசாங்கம் இதை நிராகரித்தால் அடுத்த ஆண்டு தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைத் தொடஙக வேண்டியிருக்கும் என்றும் பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் முன்னாள் அதிபரும் ஐ.நா சபையினது ஆழிப்பேரலை மீளமைப்புக்கான விசேட பிரதிநிதியுமான பில்கிளிண்டன் தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறியும் அபாயத்தில் இருப்பதாகவும், இலங்கையில் மீண்டும் இனப்பிரச்சினை தொடங்கினால் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகள் முடங்குமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, இலங்கையைச் சில வரையறை தொடர்பான தந்திரோபாயம் மிக்க முக்கியத்துவமான பிரதேசமாக அமெரிக்கா கருதுகின்றது.

ஆனால்,அமெரிக்காவின் புதிய பங்காளியான இந்தியா புலிகளுக்கும், சிங்கள பெரும்பான்மை அரசாங்கத்திற்கும யுத்தம் நடைபெறுவது தொடர்பில் அச்சம் கொண்டுள்ளது.

அதனால்,யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கவும் தமிழர்களது தன்னாட்சி அமைப்பை அங்கீகரிக்கின்ற வகையிலான அரசியல் தீர்வுக்கான வரைபை ஏற்படுத்த அமெரிக்காவும் இந்தியாவும சர்வதேச சமூக அழுத்தங்களை உருவாக்க வேண்டுமென்றும் அந்த இதழில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## ஹஜ் யாத்திரைக்கான முதலாவது விமானம் 10 ஆம் திகதி புறப்பாடு

(கொழும்பு)

ஹஜ யாத்திரைக்கான முதலாவது விமானம் எதிர்வரும் 10ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்படவிருப்பதாக முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எஸ்.வி.787ரக சவுதி எயார் லைன்ஸ் விமானத்தின் மூலம் அன்றைய தினம் பிற்பகல் 12.15மணியளவில் யாத்திரிகர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் முஸ்லிம் அமைச்சர்களும் இவர்களை அங்கிருந்து வழிஅனுப்பி வைப்பதற்காக முற்பகல் 9.00மணிக்கு விமான நிலையம் செல்லவுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.(ற-7)

## சம்பள நிலுவைகளை வழங்க 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவையின் முதலாம் மற்றும் இரண்டாம வகுப்புக்களைச் சேர்ந்த அதிபர்களின் சம்பள நிலுவைக கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 40 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எஸ்.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த நிதி வலயக்கல்வி அலுவலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு நிலுவைக் கொடுப்பனவுகளை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1995ஆம் 1996ஆம் ஆண்டுகளில் இலங்கை அதிபர் சேவையின் 1ஆம்,2ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின சம்பளத் திட்டத்தில் மாற்றுமுறைமை மேற்கொள்ளப்பட்டன.உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் ஒரு பகுதி அதிபர்களுக்கு மட்டுமே அப்போது சம்பள நிலுவைக கொடுப்பனவு வழங்கப்பட்டது.

ஆனால்,பின்னர் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட முடிவின் பிரகாரம் சகல அதிபர்களுக்கும் சம்பளத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு நிலுவைக் கொடுப்பனவுகள தற்போது வழங்கப்படவுள்ளன.

அதிபர்கள் ஒவ்வொருவரும் 15ஆயிரம் ரூபாவிற்கும் 80ஆயிரம ரூபாவிற்கும் இடைப்படட தொகையினை நிலுவையாகப பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

1995ஆம் 1996ஆம் ஆண்டுகளில் சேவையாற்றி தற்போது ஓய்வுபெற்றுள்ள அதிபர்களுக்கும் சம்பளத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு அதற்கான நிலுவை வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார். (த-7)

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

30 வருடகாலமாகக் கவனிப்பாரற்ற நிலையில் சேதமடைந்திருந்த இருபாலை கிழக்கு சைவப் பாடசாலை வீதி தற்போது வலி.கிழக்கு பிரதேச சபையால் ஒதுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் பிரமாண அடிப்படையில் திருத்தப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாக இவ் வீதியைத் திருத்தியமைக்குமாறு அப்பகுதி மக்கள் விடுத்து வந்த கோரிக்கையின் பயனாகவே தற்பொழுது இவ் வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மக்கள் திருப்தி தெரிவிக்கிறார்கள். (த-36)

## ஞானக்கோனுக்கு மாரடைப்பு

(கொழும்பு)

கதிர்காமர் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் வர்த்தகரான சார்ளஸ் ஞானக்கோனுக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதையடுத்து கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பாக கைதுசெய்யப்பட்ட ஞானக்கோன் தொடர்ந்து கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருவதால் அவர் கைது செய்யப்பட்டதிலிருந்து இதுவரை நீதிமனறில் முன்னிலைப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

## டிசம்பரில் பெருமழை அபாயம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வருடாவருடம் டிசம்பர் மாதத்தில் சராசரியாக 278.2மி.மீ. மழைவீழ்ச்சி கிடைப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் 379.6 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இவ வருடமும் டிசம்பர் மாதத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் பதிவாகிய அளவு மழை வீழ்ச்சியே கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் கிடைக்கும் மழை வீழ்ச்சியின் அளவு நவம்பர் மாதத்தை விடக்குறைவானதாகவே இருக்குமெனவும், இம மாதத்தில் பரவலாக மழை பெய்யுமென்றாலும், பெருமழை பெய்யும் எனவும் வெள்ளப்பெருக்கு ஏற்படுமெனவும் பொதுமக்கள் அஞ்சத தேவையில்லையெனவும் திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி த.பிரதீபன் தெரிவித்துள்ளார். (ற-36)

## நவீன தொழில்நுட்ப முறைகள் அறிமுகம்

(கொழும்பு)

கடிதங்களை விநியோகித்தல்,தரம் பிரித்தல் ஆகிய பணிகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தவிர்க்க நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதென தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் தொழில்நுட்ப முறைமைகள் தொடர்பான உதவிகளை அவுஸ்திரேலியா,பிரிட்டன், மலேசியா ஆகிய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கபபடவுள்ளதாக தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு சிறந்த தபால்சேவையை வழங்கும் விதத்தில் தனியார் தபால் நிலையங்களுக்கு கூடுதலான அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

தபால் விநியோக நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பிணக்குகளைத் தீர்ப்பதற்கு துரிதமாக தீர்வு காணப்படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-7)

## தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



**எப்பொழுது நாம் முழு மனதையும் இறைவனிடம் ஒப்படைத்து விடுகிறோமோ, எப்போது இறைவனிடம் மட்டுமே நாம்சரண் அடைகிறோமோ, அப்போது தான் பக்தியைப் பெற நாம் தகுதியுடையவர்கள் ஆவோம். தீவிரமான பக்தியும் மேலான ஞானமும் ஒன்றே.**

சுவாமி விவேகானந்தர்

## உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர்த்தல் குறித்து

# விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணம்,பலாலி உட்பட அதியுயர் வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்ந்து விரைவில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் தம்மை குடியேற அனுமதிக்குமாறும் விவசாயம் மேற்கொள்ள அனுமதிக்குமாறும் கோரி யாழ்.மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் விவசாயிகள் நால்வர் இணைந்து இவ்வடிப்படை மனித உரிமை மனுவை தாக்கல் செய்தனர்.

மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மக்களின் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியதுடன் சுமார் 20 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமது பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

எனவே இது குறித்து மாவட்ட செயலரின் அறிக்கையைஎதிர்வரும்பெப்.27ஆம்திகதிசமர்ப்பிக்குமாறும் அன்று வழக்கு விசாரணைக் கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும் என் றும் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (ச-4)

## நீரில் மூழ்கி மாணவன் பலி

குளத்தில் குளிக்கச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி பலியானான்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் அரியாலை நெடுங்குளத்தில் இடம் பெற்றுள்ளது. தனது நண்பர்களுடன் குளிக்கச் சென்ற பிரஸ்தாப மாணவன் நீரில் மூழ்கி மரணமானதாக தெரிவிக்கப்பட்டது. யாழ் மத்திய கல்லூரியில் 2006 ஆம் ஆண் டு வர்த்தகப் பிரிவில்கல்வி பயிலும் பிரதீ பன்(வயது-20) என்பவரே மரணமானவ ராவார். (ச)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

மட்டுவில் மகாவித்தியாலத்திற்கு முன்பாக இடம் பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வானும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானது. இதில் மட்டுவில் மத்தியைச் சேர்ந்த க.சிவராஜா (வயது-32) என்பவர் படுகாயமடைந்தார்.

அவர் உடனடியாக சாவகச்சேரி வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காமையினால் நேற்று முன்தினம் இரவு 7.30மணியளவில் மரணமானதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-37)

# இராணுவம் மீதான தாக்குதல்கள் யுத்தநிறுத்தத்தை மீறும் செயல்

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு நாட்க ளாக இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவங்கள் யுத்த நி று த்த மீறல்சம்பவங்கள்எனபொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலை நடத்திய குழுவினரை தாம் அடையாளம் கண்டுள்ளதாகவும்எனினும் இது தொடர்பான விரிவான விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.குடாநாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள் ளது. பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப் பட்டுள்ளனர்.தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பது குறித்து யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாண பிரதேசங்களில் சந்தேகத்துக் கிடமானவர்கள் நடமாடினால் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் அவர்களை கைது செய்ய துரிதகதியில் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## மீசாலையில் நேற்றிரவு கைக்குண்டு வீச்சு

மீசாலை புத்தூர் சந்தியில் நேற்று மாலை இராணுவ வாகனம் மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மாலை 6 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதே வேளை மீசாலையில் உள்ள இராணுவக்காவலரண் மீது நேற்றிரவு 8 மணியளவில் இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளது.

இதனையடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் சேத விபரங்கள் குறித்து செய்திகள் எவையும் வெளியாகவில்லை. (ச-108)


புதிய கல்வியாண்டு 2006
EVENING CLASS
தரம் 6 தொடக்கம் O/L வரை
ஆரம்பம்
10.12.05 – 2 மணி
புதிய பிரிவு II
O/L SAT, SUNDAY CLASS
மட்டும்
8.30 - 2.30
ஆரம்பம்
10.12.05 - 2 மணி
(ச-க-54)
தலைநகரில் தன்னிகரில்லாத தனித்துவமான ஒரே நிறுவனம்
விக்னா கல்வி நிறுவனம்
52 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
அனுமதிகளை 05.12.2005 முதல் பெற்றுக்கொள்ளலாம்


# பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இராணுவத்தினருக்கு எதிராகப் போராட்டம்

## இராணுவத்தினர் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் பாரிய இராணுவச் சோதனைச் சாவடிகளை இராணுவத்தினர் அமைத்து வருவதனைக் கண்டித்து மாணவர்கள் போராட்டம் ஒன்றை நேற்று நடாத்தினார்கள்.

போராட்டத்தைக் கலைக்க இராணுவம் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசி தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் புதிய இராணுவச் சோதனைச் சாவடிகளை அமை க்கும் பணிகள் நடைபெறுவதை அறிந்த கல்லூரி மாணவர்கள் நேற்று காலை 8 மணியளவில் மறியல் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

இப் போராட்டத்தினைதொடர்ந்து மாணவர்களை சமரசம் செய்யும் முகமாக இராணுவ் அதிகாரிகள் அதிபரையும் பாடசாலை ஆசிரியர்களையும் மாணவத் தலைவர்களையும் இராணுவ முகாமிற்குள் அழைத்துச் சென்று சமரச முயற்சியில் ஈடுபட்டனர்.

இருந்த போதும் மாணவர்களின் கோரிக்கைகளுக்கு எந்த முடிவும் எட்டப்படாத நிலையில் விரக்தியடைந்த மாணவர்கள் இராணுவத்தினரை நோக்கி கற்களை வீசினர்.

இதனையடுத்து மாணவர்களின் போராட்டத்தை நிறுத்துவதற்காக இராணுவத்தினர் வானத்தை நோக்கி சுட்டும் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் வீசினர்.

இதே வேளை சம்பவ இடத்துக்கு இலங்கை யுத்த நிறுத்த குழுவினர் சென்று பதற்றத்தை தடுக்கும் முயற்சிக்களில் ஈடுபட்டனர். மாணவர் மீதான கண்மூடித்தனமான காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து புறக்கணிப்புப் போராட்டம் என்னும் தலைப்பில் மனு ஒன்றும் கைய ளிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# தமிழ்மொழி மூலமான ஆசிரியர்கள் நாடு முழுவதும் 25ஆயிரம் பேர் நியமனம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மற்றும் மலையகம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதியிலும் நிலவும் தமிழ்மொழி ஆசிரியர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டுசுமார் 25 ஆயிரம் பேரை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள் ளார்.

இதற்கு மேலதிகமாக தற்போது தொண்டர் அடிப்படையில் பாடசாலைகளில் சேவையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

ஆசிரியர் சேவைக்கென 18 ஆயிரம் பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட்வர்கள் வடக்கு-கிழக்கு மற்றும் ஏனைய பகுதிக ளுக்கான தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் பற்றாக் கு றை நிலவும் பாடசாலைகளை இனங்கண்டு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கென மேலும் 3 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்பவும் மேலதிகமாக ஆயிரத்து 338 ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் அடுத்த மாதம் முதல் மூன்று மாதங்களுக்கு நடைபெறவுள்ள துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கல்வியமைசினூடாக நாடு முழுவதும்பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடை முறைப்படுத்தப்படவுள்ள தாகவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தமது அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் கல்வியமைச்சர் பிரேமஜயந்த மேலும் குறிப்பிட்டார். (ச-7)

## இராணுவத்தை உடன் வெளியேறக்...

இருந்தது. அதனைக் குழப்பும்வகையில் இராணுவத்தினரும் – பொலிஸாரும் இணைந்து 50 மேற்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் கற்களையும் மாணவர் மீது வீசினர்.

இந்தச் சம்பவத்தினை தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்த இராணுவத்தின் மிலேச்சத்தனமான செயல், மாணவர்களை ஆத்திரமூட்டுவதோடு எதிர்காலத்தில் மாணவர்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாக அமைகிறது.

ஆனால் அதற்கு சிறிதும் செவிசாய்க்காத சிங்கள அரசும், இராணுவமும் மேலாக சர்வதேச நாடுகளும் வாய்பொத்தி இருந்ததையே கண்டுவந்தோம். எனினும் எமக்கான நீதிகிட்டும் என்ற நிலையில் நாங்கள் அமைதி வழியில் போராட்டம் நடத்தினோம்.

நேற்று நடத்த மிலேச்சத்தனமான நிகழ்வு மாணவர்கள் அமைதிப் போராட்டம் நடத்துவதில் பிரயோசனம் இல்லை என்பதை எடுத்துக்காட்டி நிற்பதோடு, தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு சுதந்திரமான கல்விச் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கான உந்துசக்தியாகவும் உள்ளது.

இனிவரும் நாட்களில் மாணவர்களாகிய நாங்கள் தொடர்ச்சியான மறியல்போராட்டங்களை குடாநாடு எங்கும் விஸ்தரித்து எம் மீதான ஆக்கிரமிப்பை உடைத்தெறிவோம் என உறுதிகொண்டு மாணவர்களாகிய நாம் எமது போராட்டத்தினை தீவிரப்படுத்தவுள்ளோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## யாழ்ப்பாண நிலை...

இதனையடுத்து நேற்று மாலை அக் கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்கள் சகிதம் விடுதலைப்புலிகள் அங்கு வந்திருந்தனர். எனினும் இராணுவத்தளபதி அங்கு செல்ல வில்லை. இதனால் அச்சந்திப்பு இடைநிறுத்தப்பட்டதாக கண்காணிப்புக் குழுத்தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகளுடனான இச்சந்திப்பில் கலந்து கொள்வதற்கு அரசாங்க சமாதான செயலகம் தனக்கு அனுமதியளிக்கவில்லை என தெரிவித்த இராணுவ கட்டளைத்தளபதி சுனில் தென்னக்கோன், அது குறித்து தனதுஆட்சேபனத்தையும் தெரிவித்தார். இது குறித்து விடுதலைப்புலிகளுக்கு அறிவிக்கப்பட்டதால் நீண்ட நேரம் காத்திருந்த அவர்களும் கண்காணிப்புக் குழுவினரும் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதே வேளை அச்சந்திப்பு திட்டமிட்டபடி இன்று அல்லது நாளை நடைபெறும் என கண்காணிப்புக் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ச-4)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.